அந்தரங்கமானது

**NEW**

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020

## 21 - பொருளியல்

## புதிய பாடத்திட்டம்

## புள்ளியிடும் திட்டம்




இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# பாட உள்ளடக்கம்


| | பக்கங்கள் | | |
|---|---|---|---|
| வினாப்பத்திர அமைப்பு | i | - | ii |
| பொருளியல் வினாப்பத்திரம் I | 01 | - | 12 |
| பொருளியல் I இற்கான புள்ளி வழங்கும் திட்டம் | 13 | - | 13 |
| பொருளியல் II இற்கான புள்ளி வழங்கும் திட்டம் | 14 | - | 50 |

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020

## 21 - பொருளியல்

## (புதிய பாடத்திட்டம்)

## புள்ளி வழங்கும் விதம்

- பத்திரம் I

காலம் 2 மணித்தியாலம்
5 விடைகளைக் கொண்ட 50 பல்தேர்வு வினாக்கள், சகல வினாக்கனுக்கும் விடையளித்தல் வேண்டும்.
ஒரு விடைக்கு 02 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 100

- பத்திரம் II

காலம் 3 மணித்தியாலம்
இப்பத்திரம் 2 பிரிவுகளைக் கொண்டது
(அ) உப பகுதி - கட்டுரை வினாக்கள் - 05
(ஆ) உப பகுதி - கட்டுரை வினாக்கள் 05

குறைந்தது ஒரு பகுதியில் வினாக்கள் 02 வீதம் தெரிவு வினாக்கள் 5 இற்கு விடை எழுதியிருத்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளி வீதம் மொத்த புள்ளிகள் 100.

| | | |
|---|---|---|
| இறுதிப் புள்ளி கணித்தல் | பத்திரம் I | 100 |
| | பத்திரம் II | 100 |

இறுதிப்புள்ளி $200 \div 2 = 100$

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ △ 4/5

........................................................................

........................................................................

(ii) ........................................................................ ✓ △ 3/5

........................................................................

........................................................................

(iii) ........................................................................ ✓ △ 3/5

........................................................................

........................................................................

(03) $\quad$ (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

o o o

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

21 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (×)** இடுவதன் மூலம் காட்டுக.

**1.** ஒரு இலவசப் பொருள் (free good) பின்வருவனவற்றுள் எப்பண்பினைக் கொண்டிருக்கும்?
(1) அப்பொருளின் கேள்வியுடன் ஒப்பிடுகையில் ஓரளவு அருமைத்தன்மையைக் கொண்டிருக்கும்.
(2) அப்பொருளை நிரம்பல் செய்வதில் அமையச் செலவு ஏற்படாது.
(3) அப்பொருளின் உற்பத்தியோ அல்லது நுகர்வோ வெளிவாரி விளைவு எதனையும் ஏற்படுத்தாது.
(4) அப்பொருள் அரசாங்கத்தினால் கட்டணமின்றி இலவசமாக வழங்கப்படும்.
(5) அப்பொருளின் நுகர்வானது சமூகரீதியில் விரும்பத்தக்கது என்பதால் அரசாங்கத்தினால் அப்பொருள் வழங்கப்படும்.

**2.** பொருளியலாளர்களால் 'மூலதனம்' என்னும் பதத்தினால் சிறப்பாகக் கருதப்படுவது,
(1) வேறு பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்யும் பொருட்டு மனிதர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களையாகும்.
(2) பங்குகள் (stocks) மற்றும் முறிகள் போன்ற வடிவிலான மூலதனத்தை கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்படும் பணமாகும்.
(3) மூலதனத்தை கொள்வனவு செய்யும் நோக்கில் வீட்டுத்துறையால் திரட்டப்படும் சேமிப்புகளாகும்.
(4) மூலதனத்தைக் கொள்வனவு செய்ய முயற்சியாளரால் பயன்படுத்தப்படும் பணமாகும்.
(5) அசையா ஆதனங்கள், காடுகள், உலோகங்கள் மற்றும் கனியவளங்களாகும்.

**3.** 'எல்லாப் பொருளாதார முறைமைகளும் அருமைப் பிரச்சினையை எதிர்கொள்கின்றன' என்னும் கூற்றினால் கருதப்படுவது யாது?
(1) சமூகத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்கள் சிலவற்றின் தொகைகள் அவற்றின் கேள்வியை விடக் கூடுதலாக இருப்பதாகும்.
(2) ஒரு நாட்டில் கனிமப் படிமங்கள் குறிப்பிட்ட அளவு மட்டுமே கிடைக்கத்தக்கதாக இருக்கும் என்பதாகும்.
(3) வளங்களின் அருமைத்தன்மை காரணமாக நாடுகள் நிறைதொழில் மட்டத்தை அடையத் தவறிவிட்டன என்பதாகும்.
(4) சமூகத்தின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் அளவுக்கு உற்பத்தி வளங்கள் பற்றாக்குறையாக உள்ளன என்பதாகும்.
(5) பொருளாதார முறைமைகள் சுழற்சி ரீதியில் மீண்டும் மீண்டும் ஏற்படும் விரிவாக்கக் கட்டங்களை எதிர்நோக்கும்போது வளங்களின் பற்றாக்குறை ஏற்படும் என்பதாகும்.

**4.** ஒரு உற்பத்தி இயல்தகவு வளையியின் மீது ஒதுக்கீட்டு வினைத்திறன் கொண்ட புள்ளி எய்தப்படுவது,
(1) ஒவ்வொரு பொருளையும் உற்பத்தி செய்ய மிகக் குறைந்த உள்ளீடுகள் பயன்படுத்தப்படும் போதாகும்.
(2) ஒவ்வொரு பொருளும் எல்லை நன்மைகள் எல்லைச் செலவுகளுக்கு சமப்படும் மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் போதாகும்.
(3) நுகர்வுப் பொருள்களை விட அதிகளவில் மூலதனப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் போதாகும்.
(4) மூலதனப் பொருள்களை விட அதிகளவில் நுகர்வுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் போதாகும்.
(5) பொருளின் விலையானது எல்லை நன்மைகளை விடக் கூடுதலாக உள்ள ஒரு மட்டத்தில் ஒவ்வொரு பொருளும் உற்பத்தி செய்யப்படும் போதாகும்.

**5.** கேள்வி விதியானது,

(1) ஒரு பொருளின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி, அப்பொருளின் கேள்வி வளையியை இடப்புறமாக நகர்த்தும் எனக் கூறுகிறது.

(2) ஏனைய காரணிகள் மாறா நிலையில் ஒரு பொருளின் விலை அதிகரிக்கும்போது அதன் கேள்வித்தொகை குறையுமெனக் கூறுகிறது.

(3) ஏனைய காரணிகள் மாறா நிலையில் ஒரு பொருளின் விலை அதிகரிக்கும்போது அதன் கேள்வித்தொகை உயருமெனக் கூறுகிறது.

(4) ஒரு பொருளின் விலை வீழ்ச்சி, அப்பொருளின் கேள்வி வளையியை வலப்புறம் நோக்கி நகர்த்தும் எனக் கூறுகிறது.

(5) ஒரு பொருளின் விலை அதிகரிப்பு, அப்பொருளின் கேள்வி வளையியை இடப்புறம் நோக்கி நகர்த்தும் எனக் கூறுகிறது.

**6.** ஒரு பொருளின் கேள்வித்தொகை என்பது,

(1) ஒரு குறித்த விலையில் நுகர்வோர் அப்பொருளை கொள்வனவு செய்யத் திட்டமிடும் தொகையாகும்.

(2) அப்பொருளின் விலை மற்றும் நுகர்வோனின் வருமான மட்டம் என்பவற்றிலிருந்து சுயாதீனமானதாகும்.

(3) நுகர்வோனின் கொள்வனவுத் திட்டத்திலிருந்து சுயாதீனமானதாகும்.

(4) எப்போதும் சமநிலைத் தொகைக்கு சமமானதாகும்.

(5) வெவ்வேறு விலைகளில் நுகர்வோர் கொள்வனவு செய்ய விரும்பும் தொகையாகும்.

**7.** பின்வருவனவற்றில் எது X பொருளின் நிரம்பல் தொகையில் ஒரு அதிகரிப்பை ஏற்படுத்தும்?

(1) ஏனைய காரணிகள் மாறா நிலையில் X பொருளின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

(2) X பொருளின் உற்பத்தியில் நிரப்புப் பொருளாகிய Y பொருளின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

(3) X பொருளை உற்பத்தி செய்வதற்கான தொழினுட்பத்தில் ஏற்படும் ஒரு முன்னேற்றம்

(4) X பொருளை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் வளங்களின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

(5) X பொருளின் பதிலீடொன்றின் கேள்வியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

**8.** ஒரு போட்டிச் சந்தையில் கேள்வி, நிரம்பல் இரண்டும் அதிகரித்தால் சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பனவற்றின் மீது ஏற்படும் விளைவு என்னவாக இருக்கும்?

(1) விலை கட்டாயமாக அதிகரிக்கும் ஆனால் தொகை அதிகரிக்கலாம், குறையலாம் அல்லது மாறாதிருக்கலாம்.

(2) தொகை கட்டாயமாக அதிகரிக்கும் ஆனால் விலை அதிகரிக்கலாம், குறையலாம் அல்லது மாறாதிருக்கலாம்.

(3) தொகை கட்டாயமாகக் குறையும் ஆனால் விலை அதிகரிக்கலாம், குறையலாம் அல்லது மாறாதிருக்கலாம்.

(4) விலை கட்டாயமாகக் குறையும் ஆனால் தொகை அதிகரிக்கலாம், குறையலாம் அல்லது மாறாதிருக்கலாம்.

(5) விலை தொகை ஆகிய இரண்டும் கட்டாயமாக அதிகரிக்கும்.

**9.** ஒரு குறிப்பிட்ட நுகர்வுப் பொருளின் கேள்வித் தொழிற்பாடு $Q_D = 500 - 5P$ என்னும் சமன்பாட்டினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. 20 ரூபாவுக்கும் 30 ரூபாவுக்கும் இடையில் இப்பொருளின் விலைக் கேள்வியின் வில் நெகிழ்ச்சி யாது?

(1) – 0.25 (2) – 0.33 (3) – 0.43 (4) – 0.52 (5) – 0.66

**10.** குறித்த ஒரு நாட்டில் ஒரு தேசிய நெருக்கடி நிலையின்போது தமது பெருந்தன்மையை வெளிப்படுத்தும் விதமாக அந்நாட்டு மரக்கறி உற்பத்தியாளர்கள் போட்டிச் சந்தையில் நிலவும் சமநிலை விலையின் அரை மடங்கு விலையில் நுகர்வோர் கொள்வனவு செய்ய விரும்பும் எந்தளவினையும் நிரம்பல் செய்யத் தீர்மானிக்கின்றனர். நடவடிக்கையின் விளைவாக

(1) பொருளியல் மிகை வீழ்ச்சியடையும். (2) பொருளியல் மிகை அதிகரிக்கும்.

(3) பொருளியல் மிகை மாறாதிருக்கும். (4) நுகர்வோன் மிகை வீழ்ச்சியடையும்.

(5) உற்பத்தியாளன் மிகை அதிகரிக்கும்.

**11.** ஒரு விலை மாற்றத்தின் வருமான விளைவு எதிர்க்கணியமாக இருந்தாலும் பதிலீட்டு விளைவு அதைவிடப் பலம் வாய்ந்ததாக இருக்குமாயின், அப்பொருள்

(1) ஒரு கிபன் பொருளாகும். (2) ஒரு சாதாரண பொருளாகும்.

(3) ஒரு அத்தியாவசியப் பொருளாகும். (4) ஒரு இழிவுப் பொருளாகும்.

(5) ஒரு ஆடம்பரப் பொருளாகும்.

**12.** சந்தையில் ஒரு உயர்ந்தபட்ச விலை விதிக்கப்படுமாயின்

(1) சந்தையில் தொடர்ச்சியாக ஒரு பற்றாக்குறை ஏற்படும்.

(2) சந்தையில் தொடர்ச்சியாக ஒரு மிகைநிலை ஏற்படும்.

(3) பொருளின் விற்பனையாளர்கள் நன்மை அடைவர்.

(4) எவருமே நன்மையடையமாட்டார்கள்.

(5) நிரம்பல் தொகையானது கேள்வித் தொகையை விட அதிகமாக இருக்கும்.

**13.** பின்வருவனவற்றுள் பண்ணை உற்பத்திகள் மீது விதிக்கப்படும் பயனுறுதிவாய்ந்த குறைந்தபட்ச விலையுடன் **தொடர்புபடாத** பிரச்சினை எது?
(1) சந்தையில் தொடர்ச்சியாக மிகை நிரம்பல் காணப்படல்
(2) விவசாயத்துறை சாராத வரி இறுப்பாளர்களிடமிருந்து விவசாயிகளை நோக்கி வருமானம் மாற்றப்படல்
(3) அரசாங்கத்தினால் பாரியளவு மானியங்கள் வழங்கப்படல்
(4) நுகர்வோர் அதிக விலை செலுத்த நேரிடல்
(5) விவசாய விளைபொருள்களுக்கான கறுப்புச் சந்தை தோன்றுதல்

**14.** ஒரு போட்டிச் சந்தையில் விற்கப்படும் ஒரு பொருளின் கேள்வித் தொழிற்பாடானது $Q_D = 180 - 2P$ என்னும் சமன்பாட்டினால் தரப்படுகிறது. சந்தையின் சமநிலை விலை 65 ரூபாவாயின் நுகர்வோன் மிகையின் பெறுமதி
(1) 625 ரூபாவாகும் (2) 1 000 ரூபாவாகும் (3) 1 250 ரூபாவாகும்
(4) 3 250 ரூபாவாகும் (5) 4 500 ரூபாவாகும்

**15.** கூடிச் செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியானது ஒரு தொழில்நுட்பப் பண்பினை வெளிப்படுத்துவதுடன் அதன்கீழ் நிறுவனத்தின் வெளியீடு அதிகரிக்கும் சதவீதமானது,
(1) நிறுவனத்தின் உள்ளீடுகளை அதிகரிக்கும் சதவீதத்தை விஞ்சியதாக இருக்கும்.
(2) நிறுவனத்தின் உள்ளீடுகளை அதிகரிக்கும் சதவீதத்தை விட குறைவானதாக இருக்கும்.
(3) நிறுவனத்தின் உள்ளீடுகளை அதிகரிக்கும் சதவீதத்திற்கு சமனாக இருக்கும்.
(4) நிறுவனத்தின் நிலையான உள்ளீடுகளை அதிகரிக்கும் சதவீதத்தை விஞ்சியதாக இருக்கும்.
(5) நிறுவனத்தின் நிலையான உள்ளீடுகளை அதிகரிக்கும் சதவீதத்தை விட குறைவானதாக இருக்கும்.

**16.** பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?
(1) பொருளியல் இலாபம் = கணக்கியல் இலாபம்
(2) பொருளியல் செலவு = வெளிப்படையான செலவு + உள்ளார்ந்த செலவு
(3) பொருளியல் செலவு = வெளிப்படையான செலவு − உள்ளார்ந்த செலவு
(4) அமையச் செலவு = பொருளியல் இலாபம்
(5) கணக்கியல் செலவு = உள்ளார்ந்த செலவு

**17.** பின்வருவனவற்றுள் சிலருரிமைச் சந்தையின் இன்றியமையாத பண்பு யாது?
(1) சந்தையில் உட்பிரவேசிக்கவும் வெளியேறவும் பூரண சுதந்திரம் உண்டு
(2) பெரிய அளவுத்திட்டத்தில் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் சிலர் காணப்படல்
(3) நெருங்கிய பதிலீடுகளற்ற ஒரு பொருளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் ஒருவர் மாத்திரம் காணப்படல்
(4) ஓரினத்தன்மை வாய்ந்த ஒரு பொருள் உற்பத்தி செய்யப்படல்
(5) நிறுவனங்களுக்கிடையில் இரகசிய ஒப்பந்தங்கள் இடம்பெறும் வாய்ப்புகள் இல்லை

**18.** ஒரு நிறுவனம் தனது உற்பத்திப் பொருளுக்கு பூரண நெகிழ்வுள்ள கேள்வி வளையியை எதிர்நோக்குமாயின்,
(1) அந்நிறுவனம் விலையை ஏற்கும் ஒரு நிறுவனமன்று.
(2) நிறுவனம் விற்பனையை அதிகரிப்பதற்காக விலையைக் குறைக்க முடியும்.
(3) நிறுவனம் மொத்த வருவாயை அதிகரிப்பதற்காக விலையை அதிகரிக்க முடியும்.
(4) சந்தை விலையில் நிறுவனத்தின் எல்லை வருமான வளையி கிடையச்சுக்கு சமாந்தரமாகக் காணப்படும்.
(5) நிறுவனம் எப்போதும் பூச்சிய பொருளியல் இலாபத்தை உழைக்கும்.

**19.** வெளியீட்டின் மொத்தப் பெறுமதிக்கும் (GVO) மொத்த பெறுமதி சேர்க்கைக்கும் (GVA) இடையிலான வேறுபாடு
(1) நிலையான மூலதன நுகர்வாகும்.
(2) இடைநிலை நுகர்வாகும்.
(3) தேறிய நேரில் வரிகளாகும்.
(4) தேறிய முதன்மை வருமானமாகும்.
(5) முதனிலை உள்ளீடுகளாகும்.

**20.** தேசிய கணக்கீட்டின்போது பின்வரும் நடவடிக்கைகளில் எது உற்பத்தி வரம்பில் இருந்து நீக்கப்பட்டிருக்கும்?
(1) அனுமதிப் பத்திரமின்றி வைத்தியத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் வழங்கும் சேவைகள்
(2) உரிமையாளரே வசிக்கும் குடியிருப்புக்களிலிருந்தான சேவைகள்
(3) வீட்டுத்துறையினரால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள்
(4) அரசாங்கத்தால் கட்டணமின்றி வழங்கப்படும் கல்வி
(5) குடும்ப அங்கத்தவர்களால் நோயுற்றோரும் வயது முதிர்ந்தோரும் பேணிப்பாதுகாக்கப்படல்

**21.** முதன்மை வருமானத்தின் பிரதான கூறுகளாவன
(1) ஊழியர்களின் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், மொத்த தொழிற்பாட்டு மிகை மற்றும் உற்பத்தி மற்றும் இறக்குமதி மீதான தேறிய வரிகள்
(2) ஊழியர்களின் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், தொழிற்பாட்டு மிகை மற்றும் உற்பத்தி மீதான ஏனைய தேறிய வரிகள்
(3) ஊழியர்களின் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், மொத்த தொழிற்பாட்டு மிகை மற்றும் கலப்பு வருமானங்கள்
(4) ஊழியர்களின் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், தொழிற்பாட்டு மிகை மற்றும் நிலையான மூலதன நுகர்வு
(5) ஊழியர்களின் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், மொத்த தொழிற்பாட்டு மிகை மற்றும் உற்பத்தி மீதான ஏனைய தேறிய வரிகள்

**22.** குறித்த ஒரு ஆண்டில் தேசிய வருமானத்தை விட, தனிநபர் வருமானம் உயர்வாக இருப்பின் அதன் மூலம் பெறப்படும் முடிவு
(1) மாற்றல் செலுத்தல்களின் அளவானது சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள், கம்பனி வருமான வரிகள் மற்றும் பகிரப்படாத கம்பனி இலாபங்கள் என்பவற்றின் கூட்டுத்தொகையை விஞ்சியுள்ளது என்பதாகும்.
(2) சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புகள், கம்பனி வருமான வரிகள் மற்றும் பகிரப்படாத கம்பனி இலாபங்கள் என்பவற்றின் கூட்டுத்தொகையானது மாற்றல் செலுத்தல்களை விஞ்சியுள்ளது என்பதாகும்.
(3) சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள், கம்பனி வருமான வரிகள் என்பவற்றின் கூட்டுத்தொகை நேரில் வரிகளை விஞ்சியுள்ளது என்பதாகும்.
(4) மாற்றல் செலுத்தல்களின் அளவானது சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள், கம்பனி வருமான வரிகள் மற்றும் நேரில் வரிகள் என்பவற்றின் கூட்டுத்தொகையை விஞ்சியுள்ளது என்பதாகும்.
(5) கம்பனி வருமான வரிகள் மற்றும் நேரில் வரிகளின் கூட்டுத்தொகையானது மாற்றல் செலுத்தல்கள் மற்றும் பகிரப்படாத கம்பனி இலாபங்களின் கூட்டுத்தொகையை விஞ்சியுள்ளது என்பதாகும்.

**23.** பின்வரும் வரைபடம் கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தின் மொத்த செலவீட்டுத் (E) தொழிற்பாட்டைக் காட்டுகிறது.




600 பில்லியன் ரூபா மெய் வெளியீட்டு மட்டத்தில்,
(1) 200 பில்லியன் ரூபா பெறுமதியான திட்டமிடப்படாத கையிருப்புகளின் திரட்சி ஏற்பட்டுள்ளது.
(2) 200 பில்லியன் ரூபா பெறுமதியான திட்டமிடப்படாத கையிருப்புகளின் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
(3) 150 பில்லியன் ரூபா பெறுமதியான திட்டமிடப்படாத கையிருப்புகளின் திரட்சி ஏற்பட்டுள்ளது.
(4) 150 பில்லியன் ரூபா பெறுமதியான திட்டமிடப்படாத கையிருப்புகளின் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
(5) பொருளாதாரத்தில் பேரினப் பொருளாதாரச் சமநிலை ஏற்பட்டுள்ளது.

**24.** நேர்க்கணிய உற்பத்தி இடைவெளியைக் கொண்டுள்ள ஒரு பொருளாதாரத்தில்,
(1) பயன்படுத்தப்படாத உற்பத்தி இயலளவு காணப்படும்.
(2) சகடோட்ட வேலையின்மை நிலவும்.
(3) உண்மை வெளியீடு சாத்திய வெளியீட்டை விட குறைவாக இருக்கும்.
(4) பொருளாதார நடவடிக்கைகளின் வேகத்தில் ஒரு பின்னடைவு ஏற்படும்.
(5) கேள்வித் தூண்டல் பணவீக்க அழுத்தங்கள் காணப்படும்.

**25.** ஒரு பொருளாதாரத்தின் மொத்த சேமிப்புத் தொழிற்பாடு $S = -200 + 0.25Y$ ஆயின் அப்பொருளாதாரத்தின் மொத்த நுகர்வுச் சார்பு
(1) $C = -200 + 0.75Y$ ஆகும்.
(2) $C = 200 - 0.25Y$ ஆகும்.
(3) $C = 200 + 0.25Y$ ஆகும்.
(4) $C = -200 - 0.75Y$ ஆகும்.
(5) $C = 200 + 0.75Y$ ஆகும்.

**26.** கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தில், மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி 80 டிரில்லியன் ரூபாவாகவும் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி 240 டிரில்லியன் ரூபாவாகவும், பொதுவிலை மட்டம் 3 ஆகவும் உள்ளதாகக் கருதுக. இப்பொருளாதாரத்தின் பணநிரம்பல் 30 டிரில்லியன் ரூபாவாக இருப்பின் பணத்தின் புழக்கச் சுற்றோட்ட வேகம்
(1) 8 ஆகும். (2) 10 ஆகும். (3) 30 ஆகும். (4) 80 ஆகும். (5) 90 ஆகும்.

**27.** வங்கி முறைமையில் உள்ள ஒரு வணிக வங்கியிடம் 400 மில்லியன் ரூபா மிகை ஒதுக்குகள் இருப்பதாகவும், நியதி ஒதுக்குத் தேவை 20% ஆகவும் உள்ளதாகக் கருதுக. அதேவேளை இவ்வங்கியின் வாடிக்கையாளர் ஒருவர் தனது நடைமுறைக் கணக்கில் 25 மில்லியன் ரூபாவை வைப்புச் செய்யும்போது வங்கியானது இன்னொரு வாடிக்கையாளருக்கு 120 மில்லியன் ரூபாவை கடன் வழங்குகிறது. தற்போது இவ்வங்கியினால் இதற்கு மேலதிகமாக எவ்வளவு கடன் வழங்கப்பட முடியும்?

(1) 2 125 மில்லியன் ரூபா (2) 2 005 மில்லியன் ரூபா (3) 425 மில்லியன் ரூபா
(4) 305 மில்லியன் ரூபா (5) 300 மில்லியன் ரூபா

**28.** தற்போது இலங்கை மத்திய வங்கியானது பணக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் பிரதான நோக்கங்கள் யாவை?

(1) விலை உறுதிப்பாடும் நிதிமுறைமையின் உறுதிப்பாடும்
(2) விலை உறுதிப்பாடும் நிறைதொழில் மட்டமும்
(3) விலை உறுதிப்பாடும் பேண்தகு அபிவிருத்தியும்
(4) நிறைதொழில் மட்டமும் அதிகளவு வருமான சமபங்கீடும்
(5) விலை உறுதிப்பாடும் அரசாங்கப் பொதுப்படுகடன் சுமையைக் குறைத்தலும்

**29.** நியதி ஒதுக்குத் தேவை 10% ஆக உள்ளதாகவும், மத்திய வங்கி வணிக வங்கிகளிடமிருந்து 300 மில்லியன், ரூபாவை கொள்வனவு செய்ய திறந்த சந்தை நடவடிக்கை ஒன்றை நடத்துவதாகவும் கருதுக. இக் கொள்வனவின் காரணமாக பணநிரம்பலில் ஏற்படக்கூடிய உச்ச அளவிலான மாற்றம் யாது?

(1) 300 மில்லியன் ரூபா அதிகரிப்பு ஏற்படும்.
(2) 300 மில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்படும்.
(3) 3 000 மில்லியன் ரூபா அதிகரிப்பு ஏற்படும்.
(4) 3 000 மில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்படும்.
(5) 2 700 மில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்படும்.

**30.** பணக் கொள்கையானது மொத்தக் கேள்வியின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவது,

(1) நேர் வரி மற்றும் நேரில் வரி வருவாய் பெறுகைகளில் ஏற்படும் மாற்றங்களின் ஊடாக ஆகும்.
(2) பங்கு விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் ஊடாக ஆகும்.
(3) ஏற்றுமதிகளுக்கான கேள்வியில் ஏற்படும் மாற்றங்களின் ஊடாக ஆகும்.
(4) நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவீடுகளில் ஏற்படும் மாற்றங்களின் ஊடாக ஆகும்.
(5) அரசாங்க செலவீடுகளில் ஏற்படும் மாற்றங்களின் ஊடாக ஆகும்.

**31.** ஒரு தாராள சந்தையில் ஒரு வெளிவாரி நிலவும்போது,

(1) சமநிலை விலையானது செயற்கையாக ஓர் உயர் விலையில் நிர்ணயிக்கப்படும்.
(2) சமநிலை விலையானது செயற்கையாக ஒரு குறைந்த விலையில் நிர்ணயிக்கப்படும்.
(3) சந்தையானது சமநிலையை அடைய முடியாது.
(4) சந்தைச் சமநிலையானது சமூக ரீதியில் உத்தம வள ஒதுக்கீட்டினை உறுதிப்படுத்தாது.
(5) ஒரு பொருளின் நுகர்வோர், அப்பொருளின் பராமரிப்பு மற்றும் காப்புறுதி என்பவற்றிற்காக மேலதிக செலவுகளை ஏற்க நேரிடும்.

**32.** சந்தைகள் பொதுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் தோல்வியடைவது ஏனெனில்,

(1) அவ்வகைப் பொருள்களுக்கு கேள்வி ஏற்படுவதில்லை.
(2) உற்பத்தியாளரால் அப்பொருளின் நுகர்வோரிடமிருந்து ஒரு விலையை அறவிடுவது சாத்தியமில்லை.
(3) அத்தகைய பொருள்கள் பொதுவாக அவற்றின் உற்பத்தியில் பாரியளவு வெளிவாரிச் செலவுகளைக் கொண்டிருப்பதுடன் நுகர்வில் வெளிவாரி நன்மைகளைக் கொண்டிருக்கும்.
(4) அவற்றின் உற்பத்தி, வருமானச் சமமின்மை அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.
(5) தனியார் நிறுவனங்கள் பொதுவாக அரசாங்கத்துறையை விட உயர்வான உற்பத்திச் செலவைக் கொண்டிருக்கும்.

**33.** இலங்கை அரசாங்கத்தின் மீளெழும் செலவினங்களின் பிரதான கூறுகளாவன,

(1) வட்டிச் செலுத்தல்கள், மெய்ச்சொத்துக்களைக் கையகப்படுத்தல், சம்பளங்களும் கூலிகளும் மற்றும் வீட்டுத்துறைக்கான மாற்றல்கள்
(2) வட்டிச் செலுத்தல்கள், சம்பளங்களும் கூலிகளும், பொதுத்துறை முயற்சிகளுக்கான மூலதன மாற்றல்கள் மற்றும் ஓய்வூதியங்கள்
(3) வட்டிச் செலுத்தல்கள், சம்பளங்களும் கூலிகளும், வீட்டுத்துறையினருக்கான நடைமுறை மாற்றல்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான நடைமுறை மாற்றல்கள்
(4) வட்டிச் செலுத்தல்கள், சம்பளங்களும் கூலிகளும், கடன் தவணைச் செலுத்தல்கள் மற்றும் வீட்டுத் துறையினருக்கான நடைமுறை மாற்றல்கள்
(5) வட்டிச் செலுத்தல்கள், சம்பளங்களும் கூலியும், நிதிச் சொத்துக்களை கையகப்படுத்தல் மற்றும் உரமானியம்

**34.** ஒடுங்கு முறை வருமான வரியின் கீழ் வறிய மக்கட் பிரிவினர்,
(1) செல்வந்தர்களை விட தமது வருமானத்தின் குறைந்த சதவீதத்தை வரியாகச் செலுத்துவர்.
(2) செல்வந்தர்களை விட பெரியளவு ரூபா பெறுமதிகளை வரியாகச் செலுத்துவர்.
(3) தமது வருமானத்துடன் சமமான வீதத்தில் மாற்றமடையும் அளவினை வரியாகச் செலுத்துவர்.
(4) செல்வந்தர்களை விட தமது வருமானத்தின் உயர் சதவீதத்தை வரியாகச் செலுத்துவர்.
(5) வரி வருவாயைப் பயன்படுத்தி அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வார்.

**35.** தற்போது இலங்கை மத்திய அரசாங்கத்தின் பிரதான வருவாய் மூலாதாரமாக உள்ளது
(1) வருமானம் மீது விதிக்கப்படும் வரிகளாகும்.
(2) உற்பத்தி மற்றும் செலவீடுகள் மீது விதிக்கப்படும் வரிகளாகும்.
(3) இலாபங்கள், பங்கிலாபங்கள் மற்றும் வட்டி வருவாய்களாகும்.
(4) வர்த்தக முயற்சிகளின் மொத்தப் பெறுகைகளாகும்.
(5) லொத்தர் மூலம் பெறப்படும் வருவாய்களாகும்.

**36.** ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டின்படி, பின்வருவனவற்றுள் எவ்விடயம் உண்மையாகும் வண்ணம் நாடுகளில் பொருள் உற்பத்தி நிகழும்போது, உலகின் உற்பத்தி மற்றும் நுகர்வு மட்டங்கள் உயர்ந்த பெறுமதிகளைக் கொண்டிருக்கும்?
(1) அமையச் செலவு மிகக்குறைந்த பெறுமதியினைக் கொண்டிருக்கும் போதாகும்.
(2) முழு நன்மை உச்சப் பெறுமதியைக் கொண்டிருக்கும் போதாகும்.
(3) வர்த்தக மீதி ஒரு மிகைப் பெறுமதியைக் கொண்டிருக்கும் போதாகும்.
(4) நாணய மாற்றுவீதம் வீழ்ச்சியடைந்து செல்லும் போதாகும்.
(5) போக்குவரத்துச் செலவுகள் பெரும்பாலும் பூச்சியப் பெறுமதியைக் கொண்டிருக்கும் போதாகும்.

**37.** A என்னும் நாட்டில், ஓரலகு புடைவை உற்பத்தி செய்ய 5 ஊழிய மணித்தியாலங்களும், அரிசி ஓரலகை உற்பத்தி செய்ய 10 ஊழிய மணித்தியாலங்களும் செலவிடப்படுகின்றன. B என்னும் நாட்டில் ஓரலகு புடைவை உற்பத்தி செய்ய 7 ஊழிய மணித்தியாலங்களும், அரிசி ஓரலகை உற்பத்தி செய்ய 21 ஊழிய மணித்தியாலங்களும் செலவிடப்படுகின்றன. ஒவ்வொரு நாட்டினதும் ஒப்பீட்டு நன்மையின் அடிப்படையில் சிறப்புத் தேர்ச்சியடைய இரு நாடுகளும் தீர்மானிக்குமாயின் A நாடு B நாட்டுடன் எவ்விலையில் பொருள்களை வர்த்தகம் செய்ய விரும்பும்?
(1) ஓரலகு அரிசிக்கு 2 அலகுகளுக்கு மேற்பட்ட புடைவை
(2) ஓரலகு புடைவைக்கு 2 அலகுகளுக்கு மேற்பட்ட அரிசி
(3) ஓரலகு அரிசிக்கு 3 அலகுகளுக்கு மேற்பட்ட புடைவை
(4) ஓரலகு புடைவைக்கு 3 அலகுகளுக்கு மேற்பட்ட அரிசி
(5) ஓரலகு புடைவைக்கு 0.5 அலகுகளுக்கு மேற்பட்ட அரிசி

**38.** பின்வருவனவற்றுள் பாதுகாப்புவாதத்தை நியாயப்படுத்த பெரும்பாலும் பயன்படுத்தப்படக்கூடிய **இரண்டு** வாதங்கள் யாவை?
A - உயர் செலவுடைய உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாத்தல்
B - உபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில்களைப் பாதுகாத்தல்
C - இளநிலைக் கைத்தொழில்களைப் பாதுகாத்தல்
D - சுற்றாடல் நியமங்களைப் பாதுகாத்தல்
E - அரசாங்க வரிவருவாயை உச்சப்படுத்தல்

(1) A, D (2) B, C (3) B, D (4) C, D (5) D, E

**39.** ஒரு வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல், சென்மதி நிலுவையின் எந்தக் கணக்கில் பதிவு செய்யப்படும்?
(1) முதன்மை வருமானக் கணக்கு
(2) இரண்டாம் நிலை வருமானக் கணக்கு
(3) மூலதனக் கணக்கு
(4) நடைமுறைக் கணக்கு
(5) நிதிக் கணக்கு

**40.** மிதக்கும் நாணய மாற்று வீதம் என்பதனால் கருதப்படுவது,
(1) வெளிநாட்டு நாணயச் சந்தையில் ஏற்படும் அதிர்ச்சிகளால் ஏற்படும் நிலையற்ற தன்மைகளின்போது நாணய மாற்று வீதம் சீராக்கம் அடையத் தவறுவதாகும்.
(2) வெளிநாட்டு நாணயச் சந்தையில் தலையீடு செய்வதன் ஊடாக அரசாங்கத்தினால் பேணிச்செல்லப்படும் நாணய மாற்று வீதமாகும்.
(3) ஒரு நாட்டு நாணயத்தின் கேள்வி மற்றும் நிரம்பலுக்கு ஏற்ப நிர்ணயிக்கப்படும் நாணய மாற்று வீதமாகும்.
(4) ஒரு நாட்டு நாணயத்திற்கு ஏற்படும் மிகைக் கேள்வி காரணமாக அது மதிப்பிறக்கம் செய்யப்படும் நிலையாகும்.
(5) ஒரு நாட்டு நாணயத்தின் மிகை நிரம்பல் காரணமாக அது பெறுமதியேற்றம் செய்யப்படும் நிலையாகும்.

**41.** சென்மதி நிலுவைப் பிரச்சினை மற்றும் வெளிநாட்டு நாணய ஒதுக்கு பிரச்சினைகளையுடைய நாடுகளுக்கு உதவும் நோக்கில் தாபிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியானது (IMF) அப்பிரச்சினைகளுக்கு விதந்துரைத்த தீர்வு,
(1) குறித்த நாட்டின் நாணயத்தை மீள் மதிப்பேற்றம் செய்தல்
(2) மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் ஊடாக வெளிநாட்டு நாணய ஒதுக்குகளை குறித்த நாட்டிற்கு கடன் வழங்கல்
(3) குறித்த நாட்டின் நாணய மாற்று வீதத்தை உயர்ந்த ஒரு மட்டத்தில் மீள நிலைநிறுத்த உதவுதல்
(4) குறித்த நாட்டின் வெளிநாட்டு சொத்துக்களைக் கொள்வனவு செய்து அவற்றை வெளிநாட்டு நாணயங்களாக மாற்றல்
(5) ஏற்றுமதிக்கான புதிய சந்தைகளைக் கண்டறிய குறித்த நாட்டிற்கு உதவுதல்

**42.** கீழே உள்ள வரைபடம் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் இலங்கை ரூபாவின் பெறுமதியைக் காட்டுகிறது.




இலங்கை ரூபாவுக்கான கேள்வி $D_1$ இலிருந்து $D_2$ வாக நகர்வதன் விளைவு யாது?
(1) ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் விலை கூடியனவாக மாறும்.
(2) ஐக்கிய அமெரிக்காவுக்கு பயணம் செய்வது இலங்கைச் சுற்றுலாப் பயணிகளுக்கு மலிவானதாக மாறும்.
(3) ஐக்கிய அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு இலங்கையின் திறைசேரி முறிகள் மிகவும் மலிவானதாக மாறும்.
(4) ஐக்கிய அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு இலங்கையின் திறைசேரி முறிகள் மிகவும் செலவு கூடியதாக மாறும்.
(5) ஐக்கிய அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்வதற்கான செலவு குறையும்.

**43.** பொருளாதார அபிவிருத்தி என்பதனால் கருதப்படுவது,
(1) பொருளாதார வளர்ச்சியுடன் சென்மதி நிலுவை மிகை நிலையை அடைவதாகும்.
(2) பொருளாதார வளர்ச்சியுடன் கட்டமைப்பு மற்றும் பண்பியல் மாற்றங்களையாகும்.
(3) நகர்ப்புற சனத்தொகையின் வாழ்க்கைத்தர மேம்பாடாகும்.
(4) மொத்த தேசிய வருமானத்தின் (GNI) நிலைபேறுடைய அதிகரிப்பாகும்.
(5) சமமான வருமானப் பங்கீட்டுடன் வறுமை மட்டம் குறைவதாகும்.

**44.** பேண்தகு அபிவிருத்தி என்பதனால் குறிப்பிடப்படுவது,
(1) எதிர்காலத்தில் சுற்றாடல் சீர்கேடுகள் ஏற்பட்டாலும் நிகழ்காலத்தில் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் நம்பகத் தன்மையினை பெற்றுத்தரும் அபிவிருத்தியாகும்.
(2) எதிர்கால சந்ததிக்கு பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் சீர்கேடுகள் ஏற்பட்டாலும் நிகழ்காலத்தில் சுற்றாடலின் பேண்தகு தன்மையினை பெற்றுத்தரும் அபிவிருத்தியாகும்.
(3) எதிர்கால சந்ததி தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் ஆற்றலை விட்டுக் கொடாமல் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையிலான அபிவிருத்தியாகும்.
(4) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பேண்தகு அதிகரிப்புடன் இயற்கை வளங்களை முற்றாகச் சுரண்டுவதாகும்.
(5) நிகழ்கால சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாவிட்டாலும் எதிர்கால சந்ததி தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அபிவிருத்தியாகும்.

**45.** 'முழுவறுமைக்' கோட்டினால் காட்டப்படுவது,
(1) சமூகத்தில் காணப்படும் மிகக் கடுமையான வறுமை நிலையாகும்.
(2) வாழ்க்கையைக் கொண்டு செல்லத் தேவை என மதிப்பிடப்பட்ட குறைந்தபட்ச வருமான மட்டமாகும்.
(3) தத்தமது கலாசார விழுமியங்கள் மற்றும் பண்பாடுகளுடன் ஒப்பிடுகையில் சார்பளவில் வறியவர்களாகக் கருதப்படும் குடும்பங்களின் எண்ணிக்கையாகும்.
(4) ஒரு நகரத்தில் வறியவர்கள் செறிவாக வாழும் பிரதேசங்களையாகும்.
(5) சனத்தொகையில் மிகக்குறைந்த வருமானம் பெறும் 10% சதவீதமானோரின் சராசரி மாத வருமானமாகும்.

**46.** பின்வருவனவற்றுள் எதனை அளவிட லோரன்ஸ் வளையி பயன்படுத்தப்படுகிறது?
(1) பல்வேறு நாடுகளில் நிலவும் செல்வத்திற்கும் வருமானத்திற்கும் இடையிலான விகிதம்
(2) பல்வேறு நாடுகளில் நிலவும் பொதுப் பொருள்களுக்கும் தனியார் பொருள்களுக்கும் இடையிலான விகிதம்
(3) பல்வேறு நாடுகளில் நிலவும் வருமானச் சமத்துவத்திற்கும் வருமானச் சமமின்மைக்கும் இடையிலான விகிதம்
(4) ஒரு குறிப்பிட்ட நாட்டில் மிகக் கூடிய வருமானம் பெறும் சதவீதத்திற்கும் மிகக் குறைந்த வருமானம் பெறும் சதவீதத்திற்கும் இடையிலான விகிதம்
(5) தொழில்புரியும் வயது சனத்தொகைக்கும் தொழில்புரியாத வயது சனத்தொகைக்கும் இடையிலான விகிதம்

**47.** எத்தகைய வேலையின்மை நிலைமையின் கீழ் ஒரு ஊழியரின் எல்லை உற்பத்தி பூச்சியமாக அல்லது பூச்சியத்தை அண்மித்ததாகக் காணப்படும்?
(1) மறைமுக வேலையின்மை
(2) தன்னார்வமற்ற வேலையின்மை
(3) பருவகால வேலையின்மை
(4) கட்டமைப்புசார் வேலையின்மை
(5) உராய்வு வேலையின்மை

**48.** உலக வங்கியின் 'வியாபாரம் செய்தலின் இலகுதன்மைக்' குறிகாட்டிகள் (Ease of Doing Business Indicators)
(1) நாடுகளை அவற்றின் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பருமனின் அடிப்படையில் விருந்தோம்பும் நாடுகளாகத் தரவரிசைப்படுத்துகின்றன.
(2) நாடுகளை அவற்றின் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பருமனின் அடிப்படையில் மூலாதார நாடுகளாக தரவரிசைப்படுத்துகின்றன.
(3) ஒவ்வொரு நாடும் கொண்டுள்ள ஒப்பீட்டு நன்மையின் அடிப்படையில் கைத்தொழில்களை வகைப்படுத்துகின்றன.
(4) பல்வேறு நாடுகளில் வியாபாரங்களை ஆரம்பித்து நடத்திச் செல்வதில் காணப்படும் இலகுதன்மையை அளவிடுகின்றன.
(5) வறிய நாடுகளின் முதலீடுகளை ஊக்கமிழக்கச் செய்வதால் பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக உள்ளன.

**49.** பின்வரும் கூற்றுகளில் எது 2018 ல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைசார் உள்ளடக்கத்தை சரியாகக் குறிப்பிடுகிறது?

| | விவசாயம், காடாக்கல், மீன்பிடி | கைத்தொழில் | பணிகள் |
|---|---|---|---|
| (1) | 7.0 | 26.1 | 57.7 |
| (2) | 7.6 | 25.8 | 60.4 |
| (3) | 8.2 | 24.0 | 60.1 |
| (4) | 8.9 | 27.8 | 64.4 |
| (5) | 10.2 | 24.5 | 60.2 |

**50.** 2018 ஆம் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சலுக்கு பங்களித்த முதல் நான்கு நாடுகளாவன
(1) சீனா, ஹொங்கொங், இந்தியா, மலேசியா
(2) சீனா, சிங்கப்பூர், ஜப்பான், சுவிட்சர்லாந்து
(3) சீனா, இந்தியா, ஜப்பான், நோர்வே
(4) சீனா, கனடா, இத்தாலி, ஐக்கிய அமெரிக்கா
(5) சீனா, இந்தியா, மலேசியா, ஜேர்மனி

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2020

නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம்: **21**  විෂයය / பாடம்: **பொருளியல்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 1 | 31. | 4 | 41. | 2 |
| 02. | 1 | 12. | 1 | 22. | 1 | 32. | 2 | 42. | 3 |
| 03. | 4 | 13. | 5 | 23. | 3 | 33. | 3 | 43. | 2 |
| 04. | 2 | 14. | 1 | 24. | 5 | 34. | 4 | 44. | 3 |
| 05. | 2 | 15. | 1 | 25. | 5 | 35. | 2 | 45. | 2 |
| 06. | 1 | 16. | 2 | 26. | 1 | 36. | 1 | 46. | 3 |
| 07. | 1 | 17. | 2 | 27. | 5 | 37. | 1 | 47. | 1 |
| 08. | 2 | 18. | 4 | 28. | 1 | 38. | 2 | 48. | 4 |
| 09. | 2 | 19. | 2 | 29. | 3 | 39. | 5 | 49. | 1 |
| 10. | 1 | 20. | 5 | 30. | 4 | 40. | 3 | 50. | 1 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு ලකුණු 01 බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 50 = 50

NEW
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Sri Lanka Department of Examinations
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ආර්ථික විද්‍යාව II
பொருளியல் II
Economics II

**21 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்பொழுது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

* உப பிரிவுகள் **'அ'**, **'ஆ'** ஆகிய ஒவ்வொன்றிலும் இருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* வரைபுத்தாள்கள் வழங்கப்படும்.

**உப பிரிவு 'அ'**

(இப் பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

1. (i) அருமை என்பதனால் கருதப்படுவதென்ன? உற்பத்தி இயல்தகவு வளையியைப் பயன்படுத்தி அருமைப் பிரச்சினையை விளக்குக. (03 புள்ளிகள்)

(ii) உற்பத்தி வினைத்திறனின்மையும் வள ஒதுக்கீட்டு வினைத்திறனின்மையும் வளப்பயன்பாட்டில் விரயமாகக் கருதப்படுவது ஏன்? (04 புள்ளிகள்)

(iii) ஒரு பொருளாதார முறைமையின் பிரதான தொழிற்பாடுகள் யாவை? (03 புள்ளிகள்)

(iv) கோவிட்-19 போன்றதொரு கொள்ளை நோய் காரணமாக ஒரு நாட்டின் உற்பத்தி இயலளவிற்கு யாது நிகழும் என்பதை ஓர் உற்பத்தி இயல்தகவு வளையியைப் பயன்படுத்தி விளக்குக. (05 புள்ளிகள்)

(v) தொழிற்பிரிப்பு ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி மட்ட அதிகரிப்பிற்கு காரணமாவது ஏன் என விளக்குக. (05 புள்ளிகள்)

(i) - அருமை என்பது மனித தேவைகள் எப்போதும் அத்தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படும் வளங்களின் கிடைப்பனவை விஞ்சிதாக இருக்கும் உலகப் பொது நிலையாகும் இது கட்டாயமாக அருமையான வளங்களுக்கும் அளவற்ற தேவைகளுக்கும் இடையிலான ஒரு பிரச்சினையாகும்.

**(01 புள்ளி)**



- உற்பத்தி இயல்தகவு வளையியானது எல்லாவளங்களும் முழுமையாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்படும் போது அடையக்கூடிய எல்லா பொருள்கள் சேவைகளின் சேர்க்கைகளைக் காட்டுகிறது. உற்பத்தி இயல்தகவு வளையியானது பொருள்கள் மற்றும் சேவைகளின் அடையக்கூடிய சேர்க்கைகளாகிய B மற்றும் C போன்றவற்றை A புள்ளி போன்ற அடைய முடியாத சேர்க்கைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. பொருள்கள் மற்றும் சேவைகளின் அடையக்கூடிய சேர்க்கைகளைவிட மனித தேவைகள் அதிகமாக இருக்கும் நிலைமை அருமை எனப்படும். எனவே உற்பத்தி இயல்தகவு வளையிக்கு வெளியே அடையமுடியாத பொருட்சேர்க்கையை குறிக்கும் ஒரு புள்ளியைக் குறிப்பதன் மூலம் அருமையை வரைபடரீதியில் காட்டலாம்.

**(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி சரியான விளக்கத்திற்கு 01 புள்ளி மொத்தம் 02 புள்ளிகள்)**

(ii) - **உற்பத்தி வினைத்திறனின்மையானது** ஒரு நிறுவனம் அதிகுறைந்த செலவில் தனது வெளியீட்டை மேற்கொள்ளாத போது ஏற்படும். நிறுவனம் ஓரலகு உள்ளீட்டிற்கு உச்சவெளியீட்டைப் பெறத்தவறும் நிலை அல்லது தனது ஓரலகு வெளியீட்டை மிகக்குறைந்த உள்ளீட்டைக்கொண்டு பெறத்தவறும் நிலையை அது காட்டும்.

- பொருளாதாரத்தை முழுமையாக நோக்குமிடத்து தரப்பட்டளவு வளங்களிலிருந்து உச்ச வெளியீட்டைப் பெறமுடியாத நிலையாகும். இதன் கருத்து யாதெனில் பொருளாதாரமானது நிறைதொழில் மட்டத்துடனும் முழு உற்பத்தியுடனும் கூடிய உற்பத்தி இயல்தகவு வளையியின் மீதுள்ள ஒரு புள்ளியில் இருக்க முடியாது என்பதாகும். இது பொருளாதாரம் உற்பத்தி இயல்தகவு எல்லையைவிடக் குறைவான மட்டத்தில் இயங்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்துகிறது. இதனால் வளங்களின் குறைபயன்பாடு அல்லது வேலையின்மை ஏற்படும்.

**(02 புள்ளிகள்)**

- **ஒதுக்கீட்டு வினைத்திறனின்மை** என்பது பொருளாதாரமானது சமூகத்தால் அதிகம் விரும்பப்படும் பொருள்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்ய அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்யத்தவறும் போது ஏற்படுகிறது.

- நுகர்வோர் ஒரு பொருளின் மீது ஏற்படுத்தும் பெறுமதி ( அதாவது அவர்கள் செலுத்த விரும்பும் செலுத்தும் ஆற்றலுள்ள விலை ) அவ்வுற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட வளங்களின் செலவுக்கு சமப்படாதாயின் வளங்கள் வீண்விரயம் செய்யப்பட்டு குறையுற்பத்திக்கோ அல்லது மிகையுற்பத்தியோ இட்டுச்செல்லலாம்.

**(02 புள்ளிகள்)**

(iii) **ஒவ்வொரு பொருளாதாரமும் அதன் தன்மை எத்தகையதாயினும்** பொருளாதாரத்தின் தொழிற்பாடு இயக்கம் தொடர்பில் மூன்று அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியுள்ளது. அம்மூன்று தொழிற்பாடுகளும் வருமாறு:

- எப்பொருள்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதைத் தீர்மானித்தல். இது **ஒதுக்கீடு செய்யும் தொழிற்பாடு** எனப்படும்.

- இப்பொருள்களும் சேவைகளும் எவ்வாறு உற்பத்தி செய்யப்படவேண்டும் எனத் தீர்மானித்தல். இது **உற்பத்தி செய்யும் தொழிற்பாடு** எனப்படும்.

- யாருக்காக இப்பொருள்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானித்தல். இது **பங்கீடு செய்யும் தொழிற்பாடு** எனப்படும்.

**(ஒவ்வொரு தொழிற்பாட்டிற்கும் தலா 01 புள்ளி மொத்தம் 03 புள்ளிகள்)**

(iv)- கோவிட் 19 போன்ற ஒரு கொள்ளை நோய் காரணமாக ஒரு நாட்டின் உற்பத்தி இயலளவுக்கு என்ன நிகழும் என்பது நாட்டின் காரணித் திரட்சியிலும் அதன் உற்பத்தித் திறனிலும் தங்கியுள்ளது.

**(01 புள்ளி)**

- கொள்ளை நோயானது ஊழியப்படையின் அளவிலும் ஊழியஉற்பத்தித் திறனிலும் குறிப்பிடத்தக்க பாதிப்புகளை ஏற்படுத்துமாயின் அது பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவைக் குறைக்கக் கூடுமா கையால் குறுங்காலத்தில் உற்பத்தி இயல்தகவு வளையி இடப்புறமாகப் பெயர்ச்சியடையும்.

**(01 புள்ளி)**

- சாத்திய வெளியீடு குறைவடைவதைச் சுட்டும் வகையில் உற்பத்தி இயல்தகவு வளையி கீழ்நோக்கி நகரும்.




**(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி)**

- கோவிட்19 கொள்ளை நோயானது ஊழியப்படையின் அளவிலும் அதன் உற்பத்தித் திறனிலும் கணிசமானளவு பாதிப்பை ஏற்படுத்தாவிடின் அதனால் பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவில் வீழ்ச்சி ஏற்படும் சாத்தியமில்லை. இந்நிலையில் கொள்ளை நோயானது பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவில் செல்வாக்குச் செலுத்தாதுவிடினும் (சாத்திய வெளியீடு) கொள்ளை நோய்க்கு பொதுமக்கள் காட்டும் முடக்கல் நிலை நிரம்பல் சங்கிலிப் பாதிப்பு சந்தை ஊறுபாடுகள் போன்ற எதிர்வினைகள் காரணமாக உற்பத்தி இயலளவு பயன்படுத்தப்படும் வீதம் பாதிக்கப்படலாம்

**(01 புள்ளி)**

- இந்நிலையில் உற்பத்தி இயல்தகவு வளையி கீழ்நோக்கிப் பெயர்ச்சியடையாது ஆயினும் பொருளாதாரத்தின் உண்மை உற்பத்தி மட்டம் கீழேதரப்பட்டுள்ளவாறு சுருக்கமடையும்.




**(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி)**

(v)

a. **உற்பத்தித் திறன் அதிகரிப்பு:** தொழிற்பிரிப்பின் காரணமாக சிறக்குமியல்பு ஏற்படுவதனால் தனிநபர்களின் உற்பத்தி இயலளவு பெருமளவு அதிகரிக்கும். இவ்விடயத்தை அடம் ஸ்மித் சுட்டிக்காட்டிய பிரபலமான ஊசி உற்பத்தி பற்றிய உதாரணத்தின் மூலம் விளக்கலாம்.

b. **சரியான நபர்களை சரியான இடத்தில் வேலைக்கமர்த்தல்:** மக்கள் பல்வகைப்பட்ட திறன்களையும் திறமைகளையும் விருப்பங்களையும் கொண்டிருப்பர். இதனால் ஒவ்வொருவரும் மற்றவர்களைவிட சில தொழில்களுக்கு மிகப் பொருத்தமாக இருப்பர். தொழிற்பிரிப்பின் கீழ் வேலையானது ஒவ்வொரு வேலையாளினதும் இயலுமை மற்றும் ஆற்றல் என்பவற்றிற்கமைய ஒதுக்கீடு செய்யப்படும். மக்கள் ஒவ்வொருவரும் தாம் சிறப்பாகச் செய்யக் கூடிய உற்பத்திப் பணியில் சிறக்குமியல்படைந்தால் அவர்கள் சிலவற்றில் சிறப்பாகவும் வேறுசிலவற்றில் மந்தமாகவும் செயற்படக்கூடிய கூட்டுப்பணிகளை மேற்கொள்வதைவிட சிறக்குமியல்பு அடைந்த விடயத்தில் கூடுதலான விளைதிறனைக் கொண்டிருப்பர்.

c. **திறமையும் திறன்களும்:** வேலையாள் ஒரே செயல் முறையினை தொடர்ந்து மேற்கொள்வதால் உயர்திறன் மிக்கவராக மாறுவதுடன் உயர்திறமைகளையும் பெற்றுக் கொள்வர். சில குறிப்பிட்ட நடவடிக்கைகளில் மட்டும் சிறக்குமியல்பு பெறும் வேலையாட்கள் தரமான வெளியீட்டைத் துரிதமாகவும் உயர்தரத்துடனும் மேற்கொள்ளக் கற்றுக் கொள்வர்.

d. **புத்தாக்கங்களுக்கு வசதியேற்படும்:** தொழிற்பிரிப்பானது புதிய கருத்துக்களை விருத்தி செய்வதுடன் வேலைகளைச் செய்வதில் சிறந்த தொழில் நுட்பங்களையும் ஊக்குவிக்கிறது. வேலையாள் மீண்டும் மீண்டும் ஒரே நடவடிக்கையில் ஈடுபடுவதால் அந்நடவடிக்கையை சிறப்பாகவும் முன்னேற்றகரமாகவும் செய்ய முயலலாம். எனவே தொழிற்பிரிப்பானது புதிய இயந்திரங்கள் மற்றும் சிறந்த கருவிகளின் கண்டுபிடிப்புக்கு ஏதுவாகும்.

e. **நேரத்தைச் சேமித்தல்:** தொழிற்பிரிப்பின் கீழ் ஒரு வேலையாள் முழுச் செயன்முறையின் ஒரு பகுதியில் மாத்திரம் ஈடுபடுவார் என்பதனால் அப்பகுதியை மாத்திரம் கற்றுக் கொள்வது போது மானது. எனவே நீண்ட பயிற்சிக்காலம் தேவைப்படாது. இது பணத்தையும் காலத்தையும் சேமிப்பதாக அமையும். மேலும் வேலையாள் முன்னர்போன்று ஒரு செயன் முறையிலிருந்து இன்னொரு செயன்முறைக்கு மாற்றமடையாமல் ஒரேநடவடிக்கையில் தொழிலில் ஈடுபடுவதால் நேரத்தை வீணடிக்க வேண்டிய தேவை எற்படாது.

f. **பேரளவு உற்பத்தி ஊக்குவிக்கப்படும்:** ஒரு பண்டத்தின் உற்பத்தியை சிறிய மற்றும் எளிமையான செயன்முறைகளாக மாற்றியமைப்பதன் மூலம் தொழிற்பிரிப்பானது இயந்திரப் பிரயோகத்தின் அறிமுகத்தையும் பிரயோகத்தையும் ஊக்குவிக்கும். இயந்திரங்களை முழுமையான இயலளவுப் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் போது மட்டுமே சிக்கனமாகப் பயன்படுத்தப்பட முடியும். அதாவது அவற்றின் உற்பத்தி இயலளவு முழுமையாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். எனவே தொழிற்பிரிப்பானது பேரளவு உற்பத்தியுடன் தொடர்பு பட்டதாகும்.

**(ஒரு நன்மைக்கு 01 புள்ளி மொத்தம் 05 புள்ளிகள்)**

**2.** (i) ஒரு பொருளுக்கான கேள்விக்கும், கேள்வித் தொகைக்கும் இடையிலான வேறுபாடு யாது? ஒரு வரைபடத்தில் அவ்வேறுபாட்டைக் காட்டுக. (04 புள்ளிகள்)

(ii) வருமானக் கேள்வி நெகிழ்ச்சி எண்ணக்கருவைப் பயன்படுத்தி சாதாரண பொருள், இழிவுப் பொருள் மற்றும் ஆடம்பரப் பொருள் ஆகியவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (03 புள்ளிகள்)

(iii) ஒரு பொருளாதாரத்தில் பொருள்களைப் பங்கீடு செய்யும் பொருட்டு பயன்படுத்தப்படும் விலை தவிர்ந்த பங்கீட்டு முறைகள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iv) ஒரு சிறிய நகரத்தில் அமைந்துள்ள பாண் சந்தை பின்வரும் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

$Q_D = 110 - P$ (கேள்வி)  $Q_S = -40 + 2P$ (நிரம்பல்)

(a) இச்சந்தையின் சமநிலை விலையையும் தொகையையும் காண்க. (02 புள்ளிகள்)

(b) சமநிலையின்போது மொத்த மிகையின் அளவைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(c) 60 ரூபா விலையில் பாணுக்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சியைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(i) - கேள்வி என்பது ஏனையன மாறாநிலையில் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு பொருளின் சாத்தியமான ஒவ்வொரு விலைகளுக்கும் அவ்விலைகளில் நுகர்வோர் கொள்வனவு செய்யவிருப்பமும் ஆற்றலும் கொண்ட பல்வேறு தொகைகளுக்கும் இடையிலான **தொடர்பைக்** காட்டுகிறது.

**(01 புள்ளி)**

- ஒரு பொருளின் அல்லது சேவையின் கேள்வித்தொகை என்பது ஏனையன மாறாநிலையில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் குறிப்பிட்ட ஒரு விலையில் கொள்வனவு செய்ய விரும்பும் தொகையாகும்.

**(01 புள்ளி)**

- பின்வரும் வரைபடம் கேள்விக்கும் கேள்வித் தொகைக்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டுகிறது. **(வரைபடத்தில் கேள்வித்தொகையைச் சரியானக் காட்டுவதற்கு 01 புள்ளி கேள்வியைச் சரியாகக் காட்டுவதற்கு 01 புள்ளி மொத்தம் 02 புள்ளிகள்)**



(ii) - நேர்க்கணிய வருமான நெகிழ்ச்சிக் குணகத்தையுடைய பொருள்கள் சாதாரண பொருள்களாகும்.

**(01 புள்ளி)**

- எதிர்க்கணிய வருமான நெகிழ்ச்சிக் குணகத்தையுடைய பொருள்கள் இழிவுப் பொருள்களாகும்.

**(01 புள்ளி)**

- ஒன்றைவிடக் கூடிய வருமான நெகிழ்ச்சிக் குணகத்தையுடைய பொருள்கள் ஆடம்பரப் பொருள்களாகும்.

**(01 புள்ளி)**

(iii) - **ஒரு வரிசை என்பது** முதலில் வருபவருக்கு முதலில் சேவை வழங்கல் அடிப்படையில் பங்கீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு காத்திருப்பு வரிசையாகும்

- **கூப்பன் அல்லது பங்கீட்டு அட்டை:** இம்முறையில் அரசாங்கம் பங்கீட்டு அட்டைகளை வினியோகிக்கும் ஒரு பொருளைக் கொள்வனவு செய்வதற்கு பணத்துடன் இவ்வட்டையையும் சமர்ப்பிக்க வேண்டும்

- ஒரு வாக்குச் சீட்டை / வாக்கெடுப்பை ஏற்பாடு செய்தல்

- **விருப்பத்திற்குரிய வாடிக்கையாளர்கள்:** மிகைக்கேள்வி நிலவுங்காலங்களில் விற்பனையாளர் களிடமிருந்து சிறப்புக் கவனிப்பை பெறுபவர்கள்.

- **கறுப்புச் சந்தைகள்:** உச்சபட்ச விலைக் கட்டுப்பாடு சட்டவிரோதமாக மீறப்படும் நிலையாகும்.

- **பொதி செய்து விற்றல்:** குறைந்த விலை கொண்ட பொருள்களை உயர்விலை கொண்டுள்ளவற்றோடு பொதி செய்து விற்றல்.

**(தலா 01 புள்ளி வீதம் ஏதேனும் 3 முறைகளுக்கு மொத்தம் 03 புள்ளிகள்)**

(iv)

(a) $QD = QS$

$110 - P = -40 + 2P$

$2P + P = 110 + 40$

$3P = 150$

$P = 50$ சமநிலை விலை

$Q = 110 - 50$

$= 60$ சமநிலைத் தொகை

**(02 புள்ளிகள்)**

(b) மொத்த மிகையைக் கணிப்பிடுவதற்கு பின்வருமாறு ஒரு கேள்வி நிரம்பல் வரைபடத்தை வரையலாம்




மொத்த மிகை

$CS = [110 - 50] \times \frac{60}{2} = 1800$ **(01 புள்ளி)**

$PS = [50 - 20] \times \frac{60}{2} = 900$ **(01 புள்ளி)**

$CS + PS = 1800 + 900 = 2700$ **(01 புள்ளி)**

**(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி சரியான கணிப்பீட்டிற்கு 03 புள்ளிகள் மொத்தம் 04 புள்ளிகள்)**

(c) 60 ரூபா விலையில் பாணின் விலைக் கேள்வி நெகிழ்ச்சி:
(புள்ளி நெகிழ்ச்சிச் சூத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும்)

$$PED = \frac{\Delta Q}{\Delta P} \times \frac{P}{Q}$$

- $Q_D = 110 - P$; $P = 60$, ஆயின் $Q_D = 110 - 60 = 50$ **(02 புள்ளிகள்)**
- $\frac{\Delta Q}{\Delta P} = -1$; $\frac{P}{Q} = \frac{60}{50}$; $PED = \frac{-1}{1} \times \frac{60}{50} = \frac{-6}{5} = -1.2$ **(02 புள்ளிகள்)**

**3.** (i) 'உயர்ந்தபட்ச விலைக்கும்' 'குறைந்தபட்ச விலைக்கும்' இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) உயர்ந்தபட்ச விலை விதிப்பின் காரணமாக ஒரு பொருளுக்கு மிகைக் கேள்வி ஏற்படுவதேன்? ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) உற்பத்தி மானியத்தினால் ஒரு மீளமுடியா நலன் இழப்பு ஏற்படுவது ஏன்? பொருத்தமான ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) போட்டிச் சந்தையொன்றில் கேள்வித் தொழிற்பாடு $Q_D = 180 - 2P$ என்னும் சமன்பாட்டினாலும் நிரம்பல் தொழிற்பாடு $Q_S = -15 + P$ என்னும் சமன்பாட்டினாலும் காட்டப்பட்டுள்ளன. இச் சந்தையில் பொருளின் அலகொன்றுக்கு 72 ரூபாவாக குறைந்தபட்ச விலை விதிக்கப்படுமாயின் அதன் விளைவாக ஏற்படும் மீளமுடியா நலன் இழப்பின் அளவை கணிப்பிடுக. (08 புள்ளிகள்)

(i)-உயர்ந்த பட்ச விலை என்பது ஒரு பொருள் அல்லது சேவைக்கு குறித்துரைக்கப்பட்ட விலையை விடக் கூடுதலாக விலை அறவிடலை சட்டவிரோதமாக்கும் விதிமுறையாகும். அது ஒரு பொருள் அல்லது சேவைக்காக விற்பனையாளர் அறவிடக்கூடிய சட்டரீதியான அதிகபட்ச விலையாகும்.

**(02 புள்ளிகள்)**

- குறைந்த பட்ச விலை என்பது ஒரு பொருள் அல்லது சேவைக்கு குறித்துரைக்கப்பட்ட விலையை விடக் குறைவாக விலை செலுத்துவதை சட்டவிரோதமாக்கும் விதிமுறையாகும்.

  இது ஒரு பொருள் அல்லது சேவைக்காக அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யப்படும் சட்டரீதியான குறைந்தபட்ச விலையாகும்.

**(02 புள்ளிகள்)**

(ii)- விசேடமான சில பொருள்களுக்கு உச்சபட்ச விலை விதிப்பதன் பின்னணியிலுள்ள நியாயப்பாடு யாதெனில் சந்தை விலையில் சில அத்தியாவசிப் பொருள்களையும் சேவைகளையும் பெற நிதிவசதியற்ற நிலையிலுள்ள நுகர்வோர் அவற்றை பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துவதாகும். உச்சபட்ச விலையானது சமநிலையைவிடக் குறைவான விலையில் நிர்ணயிக்கப்படுமாயின் அதன்காரணமாக மிகைக் கேள்வி எற்படும்
( கேள்வி வளையி கீழ்நோக்கிச் சரிந்து செல்வதாயும் நிரம்பல் வளையி மேல்நோக்கிச் சரிந்த செல்வதாயும் இருக்கும் போது)

**(02 புள்ளிகள்)**

- வரைபடம்:




PM என்னும் உச்சவிலை அரசாங்கத்தால் விதிக்கப்படுமாயின் நிரம்பலாளர்கள் $Q_1$, தொகையினை மட்டுமே நிரம்பல் செய்வர். அதேவேளை கொள்வனவாளரகள் $Q_2$ தொகையினைக் கொள்வனவு செய்ய விரும்புவர். மிகைக் கேள்வியின் அளவு $Q_1$-$Q_2$

**( சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)**

(iii) - ஏனைய விலைக்கட்டுப்பாடுகளைப் போலவே உற்பத்தியாளர் மானியங்களும் மீளமுடியாத நலன் இழப்புகளை ஏற்படுத்தும். மானியத்தின் பின்னர் உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் நன்மையடைவது உண்மையாகும். எவ்வாறாயினும் முழுமையான சமூகம் என்றவகையில் உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் பெறும் நன்மையைவிட மானியத்திற்காக அதிகம் செலவிடப்படுகிறது.

- போட்டிச் சந்தையில் கொள்வனவு செய்வதை விட மானியம் வழங்கப்படும் ஒரு சந்தையில் பொருள்கள் சேவைகளையும் மக்கள் அதிகம் கொள்வனவு செய்வர்.

- மானியம் விலையைக் குறைப்பதனாலே அவர்கள் அதிகளவு கொள்வில் ஈடுபவர். அவர்கள் மேலதிகமாக கொள்வனவு செய்யும் தொகையின் பெறுமதியானது அரசாங்கம் அவர்கள் அவற்றைக் கொள்வனவு செய்ய வைக்கும் பொருட்டு மேற்கொள்ளும் செலவுகளை விடக் குறைவாகும்.

- அரசாங்கம் ஒரு பொருளை அல்லது சேவையை மானியத்தின் கீழ் கொண்டுவரும் போது நுகர்வோருக்கு ஒரு அன்பளிப்பை வழங்குகிறது நுகர்வோர் அன்பளிப்புக்கு வழங்கும் பெறுமதியானது ( நுகர்வோர் மிகையினால் அளவிடப்படும் ) அரசாங்கம் அவற்றை வாங்குவதற்காக மேற்கொள்ளும் செலவீட்டை விடக் குறைவாகும் (அரசாங்கத்தின் மானியத்திற்கான செலவு)

**(02 புள்ளிகள்)**

- மீளமுடியா நலனிழப்பைக் காட்டும் பொருத்தமான வரைபடம்:




**(02 புள்ளிகள்)**

மானியத்தின் பின்னர் நுகர்வோன் மிகை அதிகரிப்பு : C+D+E

மானியத்தின் பின்னர் உற்பத்தியாளர் மிகை அதிகரிப்பு : A+B

மானியத்தின் பின்னர் பொருளியல் மிகை அதிகரிப்பு : A+B+C+D+E

மானியத்திற்கான அரசாங்கத்தின் செலவு : A+B+C+D+E+F+G

மானியத்தின் மீளமுடியா நலனிழப்பு : (A+B+C+D+E+F+G)-(A+B+C +D +E)= (F+G)

**(iv) ஓரலகிற்கு 72 ரூபா என்னும் குறைந்த பட்ச விலையில் மீளமுடியா நலனிழப்பின் அளவு :**

- நுகர்வோன் மிகை மற்றும் உற்பத்தியாளர் மிகை ஆகிய கருவிகள் குறைந்த பட்ச விலையினால் ஏற்படும் மீளமுடியா நலனிழப்பை அளவீடு செய்யப் பயன்படுத்தலாம்.

- குறைந்தபட்ச விலை விதிக்கப்பட முன்பு பொருளாதார மிகையினளவு:

சமநிலை விலையும் சமநிலைத் தொகையும்:

QD = QS

QD = 180 – 2P ;  QS = -15 + P

180 – 2P = - 15 + P ;  195 = 3P ;  P = 65;  Q = 180 – 2(65) = 180 – 130 = 50

நுகர்வோன் மிகை $= \frac{(90-65)\times 50}{2} = \frac{1250}{2} = 625$ **(01 புள்ளி)**

உற்பத்தியாளன் மிகை $= \frac{(65-15)\times 50}{2} = \frac{2500}{2} = 1250$ **(01 புள்ளி)**

பொருளியல் மிகை = CS + PS = 625 + 1250 = 1875 (குறைந்த பட்ச விலை விதிப்பின் முன்)

இதனை பின்வரும் வரைபடத்தின் மூலம் காட்டலாம்:




(சரியான வரைபடத்திற்கு 03 புள்ளிகள்)

- குறைந்தபட்ச விலை விதிப்பின் பின்னர் பொருளாதார மிகையினளவு: அலகொன்றின் மீது 72 ரூபா குறைந்தபட்ச விலை விதிக்கப்பட்ட பின் உற்பத்தியாளர் 57 அலகுகளை நிரம்பல் செய்வர். ஆனால் நுகர்வோர் 36 அலகுகளுக்கு மட்டுமே கேள்வி எழுப்புவர். அதனால் 21 அலகுகள் மிகை நிரம்பல் செய்யப்படும். நுகர்வோர் மிகை உற்பத்தியாளர் மிகை ஆகிய இரண்டுமே வீழ்ச்சியடையும்.

குறைந்தபட்ச விலை விதிப்பின் பின் நுகர்வோன் மிகை

$$= \frac{(90-72)\times 36}{2} = \frac{18\times 36}{2} = \frac{648}{2} = 324$$

**(01 புள்ளி)**

குறைந்தபட்ச விலை விதிப்பின் பின் உற்பத்தியாளர் மிகை

$$= \frac{(57+21)\times 36}{2} = \frac{2808}{2} = 1404$$

**(01 புள்ளி)**

குறைந்தபட்ச விலை விதிப்பின் பின் பொருளியல் மிகை = 324 + 1404 = 1728

- குறைந்தபட்ச விலை விதிப்பின் பின் மீளமுடியா நலனிழப்பு = குறைந்தபட்ச விலை விதிக்குமுன் பொருளியல் மிகை – குறைந்தபட்ச விலை விதிப்பின் பின் பொருளியல் மிகை = 1875 – 1728 = 147

**(01 புள்ளி)**

**மாற்றீடான விடை:**

- ஒரு போட்டிச் சந்தையில் குறைந்தபட்ச விலை விதிக்கப்பட்ட பின்னர் கேள்வித்தொகை வீழ்ச்சியடைவதனால் வெளியீடு வீழ்ச்சியடையும். பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி கேள்வித்தொகை 50 அலகுகளிலிருந்து 36 அலகுகளாக வீழ்ச்சியடையும் இதனால் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் நலனிழப்பு ஏற்படும். வரைபடத்தில் முன்னர் நுகர்வோராலும் உற்பத்தியாளராலும் அனுபவிக்கப்பட்ட நலன் முக்கோணங்களான, A மற்றும் B ஆகியன உற்பத்தி வீழ்ச்சியின் காரணமாக இழக்கப்பட்டு விடும்.

- A மற்றும் B ஆகியன ஆகிய இரு முக்கோணப் பகுதிகளையும் கணிப்பீடு செய்வதன் மூலம் குறைந்தபட்ச விலை காரணமாக ஏற்படும் நலனிழப்பை கணிப்பீடு செய்யலாம்.

**(02 புள்ளிகள்)**




**(சரியான வரைபடத்திற்கு 03 புள்ளிகள்)**

- நுகர்வோன் மிகை இழப்பு: (முக்கோணம் A) = ((72-65)x(50-36))/2 = (7 x 14)/2 = 98/2 = 49

**(01 புள்ளி)**

- உற்பத்தியாளன் மிகை இழப்பு: (முக்கோணம் B)
  = ((65-51) x (50-36))/2 = (14 x 14) /2 = 196/2 = 98 **(01 புள்ளி)**

- மொத்த மீளமுடியா நலனிழப்பு = A + B = 49 + 98 = 147 **(01 புள்ளி)**

**4.** (i) உற்பத்தித் தொழிற்பாடு என்றால் என்ன? குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டிற்கும் நீண்டகால உற்பத்தித் தொழிற்பாட்டிற்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) அளவுத்திட்டச் சிக்கனங்களும் அளவுத்திட்டச் சிக்கனமின்மைகளும் தோன்றுவதற்கான காரணங்கள் யாவை? (04 புள்ளிகள்)

(iii) பொருளியல் இலாபம், உற்பத்தியாளன் மிகை மற்றும் நிலையான செலவு என்பவற்றிற்கு இடையிலான தொடர்பு யாது? (03 புள்ளிகள்)

(iv) பொருளியல் வாடகை என்றால் என்ன? ஒரு உற்பத்திக் காரணியானது எந்நிலைமைகளின் கீழ் ஒரு பொருளியல் வாடகையை உழைக்கலாம்? (04 புள்ளிகள்)

(v) ஒரு நிறைபோட்டிக் கைத்தொழிலில் உள்ள நிறுவனங்களின் குறுங்கால நிரம்பல் வளையிகளில் இருந்து கைத்தொழிலின் குறுங்கால நிரம்பல் வளையியை நீர் எவ்வாறு பெறுவீர்? உமது விடையை பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குக. (06 புள்ளிகள்)

(i) - உற்பத்திச் சார்பு என்பது பௌதிக உள்ளீடுகளின் தொகைகளுக்கும் வெளியீட்டுத் தொகைகளுக்கும் இடையிலான தொழில்நுட்பத் தொடர்பாகும். அது தரப்பட்ட அளவு உள்ளீடுகளைக் கொண்டு பெறக்கூடிய உச்சத் தொகையினைத் தொடர்புபடுத்துகிறது. உழைப்பு L, மற்றும் மூலதனம் K, ஆகிய இரு உள்ளீடுகள் மாத்திரம் உள்ளதாகக் கொள்வேமாயின் உற்பத்திச் சார்பினை நாம் பின்வருமாறு எழுதலாம்.
$Q = f(K, L)$ **(01 புள்ளி)**

- உற்பத்திக்கு மூலதனமும் உழைப்பும் மாத்திரமன்றி காலமும் தேவைப்படுகிறது. உற்பத்திச் செயற்பாட்டில் காலத்தின் வகிபாகத்தை கருத்திற்கொள்ள இரு வேறு காலப்பகுதிகளை வேறுபடுத்துகிறோம். குறுங்காலம் என்பது நிறுவனம் தனது மூலப்பொருள்கள் மற்றும் உழைப்பு போன்ற மாறுங்காரணிகளை மாற்றியமைப்பதன் மூலம் உற்பத்தியை மாற்றிமைக்கும் அதேவேளை மூலதனம் போன்ற நிலையான காரணிகளை மாற்றியமைக்க முடியாத காலப்பகுதியாகும். எனவே குறுங்கால உற்பத்தித் தொழிற்பாடு மாறும் உள்ளீடுகள் (V) மற்றும் நிலையான உள்ளீடுகள் (F) ஆகிய இருவகையான உள்ளீடுகளைக் கொண்டிருக்கும். இதனைப் பின்வருமாறு வெளிப்படுத்தலாம்
$Q = f(V, F)$

**(01 புள்ளி)**

- நீண்டகாலம் என்பது எல்லாக் காரணிகளையும் மாற்றியமைக்கப்போதுமான காலப்பகுதியாகும். எனவே நீண்டகால உற்பத்திச் சார்பானது மூலதனம்உள்ளடங்கலாக மாறுங்காரணிகளை மாத்திரம் கொண்டிருக்கும்.

**(01 புள்ளி)**

(ii) **அளவுத்திட்டச் சிக்கனங்களுக்கான காரணங்கள்:**

- உழைப்பைப் பயன்படுத்துவதில் அதிக சிறக்குமியல்பு ஏற்படல்
- முகாமைத்துவ சிறப்புத் தேர்ச்சிகள்
- மூலதனப் பொருள்களின் வினைத்திறனான பயன்பாடு
- சந்தைப்படுத்தல் அளவுத்திட்டச் சிக்கனங்கள்
- நிதி அளவுத்திட்டச் சிக்கனங்கள்
- இடர்தாங்கும் அளவுத்திட்டச் சிக்கனங்கள்

**(ஒவ்வொன்றிற்கும் தலா 01 புள்ளி வீதம் இரு காரணங்களுக்கு மொத்தம் 02 புள்ளிகள்)**

**அளவுத்திட்ட சிக்கனமின்மைகளுக்கான காரணங்கள்:**

- நிறுவனம் பேரளவு உற்பத்தியாளராக மாறும் போது அதன் செயற்பாடுகளை வினைத்திறனுள்ள வகையில் கட்டுப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் முடியாத நிலையில் உருவாகும் முகாமைத்துவச் சிக்கல்கள்

- மொத்தமாகக் கொள்வனவு செய்வதால் பெறப்படும் நன்மைகள் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு அப்பால் மறைந்து போய்விடும். ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் பெற்றுக்கொள்ளக்கூடிய முக்கிய உள்ளீடுகளின் நிரம்பல் மட்டுப்படுத்தப்படுவதால் செலவுகள் அதிகரிக்கும்.

- பாரிய உற்பத்தித் தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் தமது தொழிலிருந்து அந்நியப்படுத் தப்பட்டவர்களாக உணர்வர் இதனால் உற்பத்தி வினைதிறன் அதிகரிப்பிற்கு அவர்களது அர்ப்பணிப்பு குறைவாகவிருக்கும்.

- வியாபார நடவடிக்கைகள் நிறுவனத்தின் தலைமைச் செயலகத்திலிருந்து வெகுதொலைவுக்கு பரந்து பட்டிருப்பதால் அலகொன்றிற்கான போக்குவரத்துச் செலவுகள் அதிகரிக்கும்.

- நிறுவனம் பாரிய அளவினதாக மாற்றடையும் போது அதன் கைத்தொழில் உறவுகள் மோசமடைய லாம். அந்நியப்படுத்தப்பட்டதாக உணரும் மனோநிலை கைத்தொழில் பிணக்குகள் என்பன உற்பத்திச் செலவுகளை அதிகரிக்கச் செய்யும்.

**(தலா 01 புள்ளி வீதம் இரு காரணங்களுக்கு் மொத்தம் 02 புள்ளிகள்)**

(iii)- பொருளியல் இலாபம் என்பது மொத்த வருவாய்க்கும் மொத்த மாறுஞ் செலவுகளையும் மொத்த நிலையான செலவுகளையும் உள்ளடக்கிய மொத்தச் செலவுக்கும் இடையிலான வேறுபாடாகும்.

**(01 புள்ளி)**

- உற்பத்தியாளர் மிகை என்பது மொத்த வருவாய்க்கும் மொத்த மாறுஞ்செலவுக்கும் இடையிலான வேறுபாடாகும். எனவே உற்பத்தியாளன் மிகையானது பொருளியல் இலாபத்தை விடப் பெரிதாக இருக்கும்.

**(01 புள்ளி)**

- பொருளியல் இலாபத்தைப் கணிப்பிடுவதில் நிலையான செலவுகள் கருத்திற் கொள்ளப்படும். உற்பத்தியாளன் மிகையைக் கணிப்பிடுவதில் நிலையான செலவுகள் கருத்திற்கொள்ளப்படுவதில்லை. எனவே உற்பத்தியாளன் மிகையானது நிலையான செலவின் அளவினால் பொருளியல் இலாபத்தை விடக் கூடுதலாகவிருக்கும்.

**(01 புள்ளி)**

(iv) - பொருளியல் வாடகை என்பது உற்பத்திக் காரணிஉரிமையாளர் உற்பத்திக்காரணியை பயன்பாட்டிற்கு உட்படுத்த எதிர்பார்க்கும் குறைந்தபட்ச கொடுப்பனவுக்கு மேலதிகமாக பெற்றுக் கொள்ளும் வருமானமாகும்.

**(01 புள்ளி)**

- ஒரு உற்பத்திக்காரணியை நிரம்பல் செய்யத்தூண்டத் தேவையான குறைந்தபட்ச வருமானம் அக்காரணியைப்பயன் படுத்துவதன் அமையச் செலவாகும். இவ்வமையச் செலவானது ஒரு உற்பத்திக் காரணியின் மாற்றல் வருவாய் எனவும் அழைக்கப்படும்.

**(01 புள்ளி)**

- பொருளியல் வாடகையை உள்ளடக்கியுள்ள காரணிவருமானத்தின் அளவு அக்காரணியின் நிரம்பல் நெகிழ்ச்சியில் தங்கியுள்ளது. காரணிநிரம்பல் பூரண நெகிழ்வற்றதாயின் அதன் முழுமையான வருமானமும் பொருளியல் வாடகையாக இருக்கும். காரணிநிரம்பல் பூரண நெகிழ்வுள்ளதாயின் பொருளியல் வாடகை வருமானம் பூச்சியமாகும்.

- பொதுவாக ஒரு உற்பத்திக்காரணியின் நிரம்பல் பூரண நெகிழ்வுள்ள நிலைக்கும் பூரண நெகழ்வற்ற நிலைக்கும் இடைப்பட்டதாக இருக்கும் போது காரணிவருமானத்தின் ஒரு பகுதி பொருளியல் வாடகையாகவும் மற்றொருபகுதி மாற்றல் வருமானமாக அதாவது அமையச் செலவாகவும் காணப்படும். எனவே எந்த ஒரு உற்பத்திக் காரணியினதும் நிரம்பலானது குறிப்பிட்டளவு நெகிழ்வற்றதன்மை கொண்டிருக்கும் போதே பொருளியல் வாடகையை உழைக்க முடியும்.

**(02 புள்ளிகள்)**

(v) - நிறுவனங்களின் குறுங்கால நிரம்பல் வளையிகள் சராசரி மாறுங்செலவின் இழிவுப்புள்ளிக்கு மேற்பட்ட எல்லைச் செலவு வளையிகளின் எல்லாப் புள்ளிகளையும் கருதுவதாகும்

**(01 புள்ளி)**

- தொழிலின் குறுங்கால நிரம்பல் வளையியை ஒவ்வொரு விலையிலும் கைத்தொழிலிலுள்ள எல்லா நிறுவனங்களின் நிரம்பல் தொகைகளைக் கூட்டுவதன் மூலம் பெறலாம். இதன்போது நிறுவனங்களின் எண்ணிக்கையும் பொறித்தொகுதிகளின் அளவும் மாறாதெனக் கருதப்படும்.

**(01 புள்ளி)**

- தொழில் முடிவுறுத்தல் விலையில் (Shut down price) தொழிலின் நிரம்பல் வளையி கிடையச்சுக்கு சமாந்தரமாகும். தொழில் முடிவுறுத்தல் விலைக்கு மேலே விலை அதிகரிக்கும் போது தொழிலின் நிரம்பல் செய்யப்படும் தொகை அதிகரிக்கும்

**(01 புள்ளி)**

**பொருத்தமான வரைபடங்கள்:**

**நிறுவனத்தின் நிரம்பல் வளையி**




**தொழிலின் நிரம்பல் வளையி**




**(நிறுவனத்தின் சரியான குறுங்கால நிரம்பல் வளையிக்கு 01 புள்ளி தொழிலின் குறுங்கால நிரம்பல் வளையிக்கு 02 புள்ளிகள் மொத்தம் 03 புள்ளிகள்)**

5. (i) பின்வரும் நடவடிக்கைகள் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படுமா உள்ளடக்கப்படாதா என்பதைக் குறிப்பிட்டு உமது விடைக்கான காரணங்களை விளக்குக.

   (a) இலங்கையைச் சேர்ந்த ஒரு கம்பனி புதிதாக வெளியீடு செய்த 1 மில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளை ஒரு முதலீட்டாளர் கொள்வனவு செய்தல்

   (b) 50 மில்லியன் ரூபா பெறுமதியான ஒரு புதிய வீட்டைக் கட்டுதல்

   (c) கொழும்பில் உள்ள ஒரு உணவகம் ஒரு மீனவரிடமிருந்து 50 000 ரூபா பெறுமதியான மீனைக் கொள்வனவு செய்தல்

   (d) ஒரு விவசாயி அருகில் உள்ள வனத்தில் இருந்து 5 000 ரூபா பெறுமதியான தேனைச் சேகரித்தல்

   (e) ஒரு பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்குழு 10 மில்லியன் ரூபா செலவீட்டில் கோவிட் -19 கொள்ளை நோயின் பொருளாதாரத் தாக்கங்கள் பற்றிய ஆய்வுத் திட்டத்தை பூர்த்தி செய்தல் (01 × 5 = 05 புள்ளிகள்)

(ii) கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரம் குறித்த பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன.

| விடயம் | பெறுமதி (பில்லியன் ரூபா) |
|---|---|
| மொத்த நுகர்வுச் செலவீடு | 10 000 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 4 000 |
| பொருள்கள் பணிகள் ஏற்றுமதிகள் | 3 500 |
| பொருள்கள் பணிகள் இறக்குமதிகள் | 4 500 |
| உலகம் முழுவதிலுமிருந்தான தேறிய முதன்மை வருமானம் | – 400 |
| உலகம் முழுவதிலுமிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் | 1 000 |

மேலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(a) மொத்த தேசிய வருமானம் (02 புள்ளிகள்)

(b) மொத்த தேசிய சேமிப்பு (02 புள்ளிகள்)

(iii) பின்வரும் மாதிரியானது அரசாங்கத்துறை அற்ற மூடப்பட்ட ஒரு பொருளாதாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது

$C = 500 + 0.8Y$   $I = 600$ (எல்லாப் பெறுமதிகளும் பில்லியன் ரூபாவில்)

(a) இப்பொருளாதாரத்தின் தன்னிச்சையான செலவீடுகளின் அளவு யாது? (02 புள்ளிகள்)

(b) மொத்த வெளியீட்டின் சமநிலை மட்டப் பெறுமதி யாது? (02 புள்ளிகள்)

(c) முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி யாது? (02 புள்ளிகள்)

(iv) பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி மொத்த செலவீட்டு தொழிற்பாட்டிற்கும் மொத்தக் கேள்வி வளையிக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(i) a. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **உள்ளடக்கப்படாது.** பங்குச்சந்தை நடவடிக்கைகள் உற்பத்தியில் இடம்பெறும் பெறுமதிச் சேர்க்கைகளைப் பிரதிபலிப்பதில்லை. அது ஒரு நிதிப்பரிமாற்றமாகும்.

b. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **உள்ளடக்கப்படும்.** அது உற்பத்தியில் இடம்பெறும் ஒரு பெறுமதிச் சேர்க்கையைப் பிரதிபலிப்பலிக்கிறது.

c. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **உள்ளடக்கப்படாது.** அது உணவகத்தின் உற்பத்தியில் பயன் படுத்தப்படும் ஒரு இடைநிலை உள்ளீடாகும்.

d. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **உள்ளடக்கப்படும்.** அது உற்பத்தி எல்லைக்குள் இடம்பெறும் ஒரு பயன்மிகு பொருளாதார நடவடிக்கையாகும்.

e. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **உள்ளடக்கப்படும்.** அது உற்பத்தி எல்லைக்குள் இடம்பெறும் ஒரு பயன்மிகு பொருளாதார நடவடிக்கையாகும்.

**(ஒவ்வொன்றிற்கும் தலா (01) புள்ளி மொத்தம் (05) புள்ளிகள்)**

(ii) - மொத்த உள்நாட்டு உற்பத்தி:

GDP = மொத்த நுகர்வுச் செலவீடு + மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் + (பொருள்கள் சேவைகள் ஏற்றுமதி – பொருள்கள் சேவைகள் இறக்குமதி)

GDP = 10,000 + 4000 + (3500 – 4500) =

= 10,000 + 4000 + (-1000) = ரூபா. 13,000 பில்லியன் **(01 புள்ளி)**

a. மொத்தத் தேசிய வருமானம் = மொத்த உள்நாட்டு உற்பத்தி + வெளிநாட்டிலிருந்தான தேறிய முதனிலை வருமானங்கள்

GNI = 13,000 + (- 400) = ரூபா. 12,600 பில்லியன் **(01 புள்ளி)**

மொத்த உள்நாட்டு சேமிப்பு = மொத்த உள்நாட்டு உற்பத்தி – மொத்த நுகர்வுச் செலவீடு

SD = 13,000 – 10,000 = ரூபா. 3,000 பில்லியன் **(01 புள்ளி)**

b. மொத்தத் தேசிய சேமிப்பு = மொத்த உள்நாட்டு சேமிப்பு + வெளிநாட்டிலிருந்தான தேறிய முதனிலை வருமானங்கள் + வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள்

SN = 3,000 + (- 400) + 1,000 = ரூபா. 3,600 பில்லியன்

**(01 புள்ளி)**

(iii) a. **தன்னிச்சையான செலவீடுகள் = தன்னிச்சையான நுகர்வு + தன்னிச்சையான முதலீடு**

= 500 + 600 = ரூபா. 1,100 பில்லியன்

**(02 புள்ளிகள்)**

b. **Y = C + I**

Y = 500 + 0.8Y + 600;

Y = 1100 + 0.8Y ;

0.2Y = 1100 ;

Y = ரூபா. 5,500 பில்லியன் **(02 புள்ளிகள்)**

c. முதலீட்டுப் பெருக்கி (k) $= \frac{1}{1-mpc} = \frac{1}{1-0.8} = \frac{1}{0.2} = 5$

**(02 புள்ளிகள்)**

(iv) - மொத்த செலவீட்டுச் சார்பானது வீட்டுத்துறையினரும் நிறுவனங்களும் இறுதி வெளியீட்டைக் கொள்வனவு செய்ய ஒவ்வொரு வருமான மட்டத்திலும் எந்தளவைச் செலவிட விரும்புகின்றன என்பதைக்காட்டும். எளிமையான ஒரு பொருளாதாரத்தில் மொத்த செலவீட்டுச் சார்பானது நுகர்வுச் சார்பு (C) முதலீட்டுச்சார்பு (I) என்பவற்றின் கூட்டுத் தொகைக்குச் சமனாகும்.

**(01 புள்ளி)**

- பின்வரும் வரைபடமானது மொத்தச் செலவீட்டுச் சார்பைக் காட்டுகிறது.




**(சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)**

- மொத்தக் கேள்வி வளையியானது ஒவ்வொரு சாத்தியமான விலையிலும் உள்நாட்டு நுகர்வோரும் வியாபார நிறுவனங்களும் அரசாங்கமும் வெளிநாட்டுக் கொள்வனவாளரும் கூட்டாகக் கொள்வனவு செய்ய விரும்பும் பொருள்கள் சேவைகளின் பல்வேறு தொகைகளை ( மெய் மொத்த உள்நாட்டு வெளியீடு) காட்டுகிறது.

**(01 புள்ளி)**

- மொத்த கேள்விச் சார்பைக் காட்டும் வரைபடம்:




**(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி)**

**உப பிரிவு 'ஆ'**

**(இப் பிரிவிலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்க.)**

**6.** (i) பணத்தின் தொகைக் கோட்பாடு என்றால் என்ன? (04 புள்ளிகள்)

(ii) பணவீக்கத்தின் செலவுகள் யாவை? (04 புள்ளிகள்)

(iii) பணக் கேள்வியை நிர்ணயிக்கும் பிரதான காரணிகள் யாவை? (03 புள்ளிகள்)

(iv) இலங்கை மத்திய வங்கியின் அடிப்படைத் தொழிற்பாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தில் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் மொத்தப் பணக் கையிருப்புக்கள் (M) 6 400 பில்லியன் ரூபாவாகவும், பொதுமக்களால் பேணப்படும் வங்கி வைப்புக்கள் (D) 5 200 பில்லியன் ரூபாவாகவும், நியதி ஒதுக்கு வீதம் 10%ஆகவும், வங்கிகள் வசமுள்ள மிகை ஒதுக்குகளின் அளவு 280 பில்லியன் ரூபாவாகவும் இருந்ததெனக் கருதுக.

(a) இப்பொருளாதாரத்தில் காணப்பட்ட உயர் வலுப் பணத்தின் அளவு யாது? (03 புள்ளிகள்)

(b) பணப்பெருக்கியின் பெறுமதி யாது? (02 புள்ளிகள்)

(i) - பணத்தின் தொகைக் கோட்பாடானது பொதுவிலைமட்டமானது பணத்தின் தொகை அளவுகளுடன் நேர்க்கணிய ரீதியில் தொடர்புபட்டுள்ளதுடன் பணத்தொகைகளில் ஏற்படும் மாற்றம் விலைமட்டத்தில் அதேசதவீத மாற்றத்தை ஏற்படுத்தும் எனவும் கூறுகிறது. எனவே உதாரணமாக பணத்தொகை இரட்டிப்பாகினால் விலைமட்டமும் இரட்டிப்பாகும். இதன் படி நிலையான பண நிரம்பல் நிலையான விலைகளை ஏற்படுத்தும்.

**(02 புள்ளிகள்)**

- இக்கோட்பாடானது பரிமாற்றச் சமன்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது: MV = PY அல்லது MV = PT இச்சமன்பாட்டிலுள்ள மாறிகளின் நடத்தை பற்றிய சில எடுகோள்களின் அடிப்படையில் இச் சமன்பாடு நிர்ணயக் கோட்பாடாக மாற்றப்படலாம்.

- பணத்தின் புழக்கச் சுற்றோட்ட வேகம் (V) நிலையானதெனவும் நிறைதொழில் மட்டம் நிலவுவதாகவும் ( அதாவது Y அல்லது T நிலையானது ), இக்கோட்பாடானது பணநிரம்பலில் ஏற்படும் மாற்றம் (M) நேரடியாக அதே சதவீதத்தினால் விலை மட்டத்தில் (P) தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கூறுகிறது.

**(02 புள்ளிகள்)**

(ii) **பணவீக்கத்தின் செலவுகள் :**

- வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் இதனால் பொதுமக்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடையும்.

- முழு வறுமை மட்டம் அதிகரிக்கும்

- அது நியாயமற்ற வருமானப் பங்கீட்டை ஏற்படுத்தலாம்: நிலையான ஓய்வூதியம் பெறும் முதியவர்கள் போன்ற சமூகத்தின் பலவீனமான குழுவினர் பாதிக்கப்படுவர். அதேவேளை உறுதியான பேரம்பேசும் நிலையில் உள்ளோர் நன்மையடைவர். எனவே பணவீக்கமானது வருமான மற்றும் செல்வப்பங்கீட்டை சாதகமற்றதாக மாற்றியமைக்கும்.

- கடன் வாங்கியோர் கடன் கொடுத்தோர் மத்தியிலும் சாதகமற்ற பங்கீடு இடம் பெறும். பணவீக்க நிலைமையின் போது வட்டிவீதமானது பணவீக்க விதத்தை விடக் குறைவாக இருக்கும். அதனால் உண்மையில் கடன் வாங்கியவர்கள் கடன் கொடுத்தவர்களுக்கு ஒரு எதிர்க்கணிய மெய்வட்டி வீதத்தைச் செலுத்துவர் இதனால் பணவீக்கமானது செல்வத்தை கடன் கொடுத்தோரிடமிருந்து கடன் வாங்கியோரை நோக்கி மீள்பங்கீடு செய்யும் போக்குடையது.

- பணவீக்கமானது பல்வகைப்பட்ட பொருளாதார நடத்தைகளில் பிறழ்வுகளை ஏற்படுத்துவதால் பொருளியல் முகவர்கள் மீது செலவுகளை எற்படுத்தும். நுகர்வோர் பணவீக்கம் அதிகரிக்கும் என எதிர்பார்த்தால் தமது கொள்வனவு நடவடிக்கைகளை முன்கூட்டியே செய்வதால் அவர்களத வழமை யான நுகர்வுநடத்தையில் பிறழ்வு எற்படும். மளிகைப்பொருள்கள் போன்ற பொருள்களைப் பதுக்கி வைக்கும் நிலைக்கும் இட்டுச்செல்லும்.

- நிச்சயமற்ற தன்மைகள் நிறுவனங்களின் நடத்தைகளைப்பாதித்து அவற்றின் மீது செலவுகளை ஏற்படுத்தும். நீண்டகாலத்திட்டமிடல் மிகச்சிரமமானதாக மாறும். நிறுவனங்கள் உற்பத்தி தொடர்பான முதலீடுகளிலிருந்து பொருட்பதுக்கல் ஊகவணிகம் போன்ற நடவடிக்கைகளை நோக்கி தமது முதலீடுகளை நகர்த்துவர்

- பணவீக்கம் நாணயமாற்றுவீதத்தை மிகை மதிப்புடையதாக மாற்றும் இதனால் வர்த்தக நிலுவை பாதகமானதாக மாறும்.

- வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு எதிரான தொழிற்சங்க நடவடிக்கைகள் பொருளாதாரத்தின் நடவடிக்கைகளில் ஊறுபாடுகளை ஏற்படுத்தலாம்.

- 'செருப்புத் தோல் செலவுகள்' (shoe leather cost) மற்றும் 'பட்டியல் செலவுகள்' (menu cost) ஏற்படலாம்: துரித பணவீக்க காலத்தில் நுகர்வோர் அதிக முயற்சியையும் காலத்தையும் எப்பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன எவற்றின் விலைகள் அதிகரிக்கவில்லை எனத்தேடுவதில் செலவிடுவர். இம்மேலதிக செலவுகள் செருப்புத் தோல் செலவுகள் எனக் கூறப்படும். மாறாக பட்டடியல் செலவுகள் நிறுவனங்கள் தமது விலைப்பட்டியல்களை அச்சிட விற்பனை இயந்திரங்களில் விலைமாற்றங்களைத் துரிதமாகச் செய்ய ஏற்படும் செலவுகள் பட்டியல் செலவுகளாகும்.

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளிவீதம் நான்கு விடயங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

(iii) - மெய் வருமானம்
- விலை மட்டம்
- வட்டிவீதம்
- எதிர்காலப் பணவீக்கம் மற்றும் வட்டிவீதம் குறித்த எதிர்பார்க்கைகள்
- நிதிசார் புத்தாக்கங்கள்.

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளிவீதம் மூன்று விடயங்களுக்கு மொத்தம் 03 புள்ளிகள்)**

(iv) இலங்கை மத்திய வங்கியின் அடிப்படைத் தொழிற்பாடுகள்:
- பணக்கொள்கையை நடைமுறைப்படுத்தல்
- நாணயமாற்று வீத கொள்கையை நடைமுறைப்படுத்தல்
- சர்வதேச உத்தியோகபூர்வ ஒதுக்குகளை முகாமைப்படுத்தல்
- நிதிமுறைமையினைக் கண்காணித்தல்
- வங்கிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நிதிநிறுவனங்களுக்கு உரிமம் வழங்குதல் நிருவாகக் கட்டுப்பாடு விதித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- செலுத்தல் முறைமைகளுக்கான நிருவாக நடைமுறைகளையும் தீர்ப்பனவு வசதிகளையும் வழங்கல்
- தேசிய நாணயத்தை வெளியிடலும் விநியோகித்தலும்
- பொருளாதாரத் தரவுகளையும் புள்ளிவிபரங்களையும் தொகுத்தலும் வெளியிடலும்
- அரசாங்கத்தின் வங்கியாளராகவும் நிதி ஆலோசகராகவும் தொழில்படல்

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளிவீதம் மூன்று தொழிற்பாடுகளுக்கு மொத்தம் 03 புள்ளிகள்)**

(v) a. உயர்வலுப் பணம் (H) = பொதுமக்கள் வசமுள்ள நாணயம் ($C_P$) + வணிக வங்கிகளிலுள்ள நாணயம் ($C_B$)

பொதுமக்கள் வசமுள்ள நாணயம் (CP) = மொத்தப் பணக்கையிருப்பு (M) - பொதுமக்களின் பெயரிலுள்ள மொத்த வைப்புகள் (D)

= 6, 400 – 5, 200 = 1200. **(01 புள்ளி)**

வணிக வங்கிகளிலுள்ள நாணயம் (CB) = தேவைப்படும் ஒதுக்குகள் + மிகை ஒதுக்குகள்

தேவைப்படும் ஒதுக்குகள் = rD = 0.10 (5200) = 520

மிகைஒதுக்குகள் = 280

வணிகவங்கிகளிலுள்ள நாணயம் ($C_B$) = 520 + 280 = 800

**(01 புள்ளி)**

உயர்வலுப்பணத்தின் மொத்த அளவு = $C_P + C_B = 1200 + 800$

= ரூபா. 2, 000 பில்லியன்

**(01 புள்ளி)**

b. பணப்பெருக்கி (M) = $\frac{M}{H}$ $\frac{\text{(Total Money Stock)}}{\text{(High-powered Money)}}$

= $\frac{6400}{2000}$ = $\frac{16/5}{5}$ = 3.2

**(02 புள்ளிகள்)**

**மாற்றீடான விடை:**

பணப் பெருக்கி (m) = $\frac{1+c}{c+r+er}$

c = நாணய வைப்பு விகிதம் (C/D) : 1200/5200 = 3/13 = 0.23

r = நியதி ஒதுக்குத் விகிதம்: 10%

er = மிகை ஒதுக்கு விகிதம் (ER/D) : 280/5200 = 7/130 = 0..05

பணப் பெருக்கி (m) = (1+c)/(c+r+er) = (1+0.23)/((0.23+0.10+0.05))

= 1.23/0.38 = 3.24

**(02 புள்ளிகள்)**

**7.** (i) பின்வரும் பொருள்களையும் சேவைகளையும் தூய பொதுப் பண்டங்களாகக் கருத முடியுமா? முடியாதா? என்பதைக் குறிப்பிட்டு உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(a) கலங்கரை விளக்கங்கள்

(b) கடல் மீன்கள்

(c) இணையம் (03 புள்ளிகள்

(ii) மேன்மைப் பண்டங்கள் இரண்டினைப் பெயரிட்டு அவை மேன்மைப் பண்டங்களாகக் கருதப்படுவது ஏன் என விளக்குக. (04 புள்ளிகள்

(iii) 'நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம்', 'இடைக்காலக் கணக்கு அறிக்கை' என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்

(iv) அண்மை ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தின் வரியல்லா அரசிறை வருவாய் மூலாதாரங்கள் யாவை? (04 புள்ளிகள்

(v) ஒரு தாராள சந்தையில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுள்ள ஒரு பொருள் மிகை உற்பத்தி செய்யப்படுவது ஏன்? வரைபடம் ஒன்றைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (05 புள்ளிகள்

(i) a. கலங்கரை விளக்கங்கள்: கலங்கரைவிளக்கம் ஒரு பொதுப்பொருளாகும் ஒருவருடைய நுகர்வின் காரணமாக இன்னொருவருடைய நுகர்வுக்கு கிடைக்கும் அளவில் எவ்வித குறைவும் ஏற்படாத காரணத்தினால் அது நுகர்வில் போட்டித்தன்மையற்றதாகும். அத்துடன் ஒருவரின் பொருட்டு அது வழங்கப்படும் போது தன்னிச்சையாகவே ஏனையவர்களுக்கும் அது கிடைக்கக் கூடியதாக இருப்பதனால் அது விலக்குதல் விதிக்கு உட்படாததாகும்.

b. கடல் மீன்கள்: இது ஒரு பொதுவளமாகும் அதனைப்பயன்படுத்துவது விலக்கப்படமுடியாதது. அதனைப்பயன்படுத்துவதை யாரும் தடுக்க முடியாது. ஆனால் அதன் நன்மையைப் பெறுவதில் போட்டித்தன்மையுண்டு. ஒருவர் பிடிக்கும் மீனின் அளவு ஏனையவர்களுக்கு கிடைக்காது.

c. இணையம்: இது ஒரு தூய பொதுப்பொருளன்று. இதனைப் பயன்படுத்துபவர்களை விலக்கிவைக்க முடியும். ஆனால் இதன் நுகர்வு போட்டித்தன்மையற்றதாகும். எல்லோராலும் ஏக காலத்தில் நுகரப்படமுடியும்.

**(ஒவ்வொன்றுக்கும் தலா 01 புள்ளி மொத்தம் 03 புள்ளிகள்)**

(ii)- சுகாதார சேவை
- ஆரம்பக்கல்வி
- சிறுவர்களுக்கான தடுப்பூசிகள்
- தொழிற்பயிற்சித் திட்டங்கள்
- பொது நூலகங்கள்
- அருங்காட்சியகங்கள்

**(இரு விடயங்களுக்கு 01 புள்ளி மொத்தம் 02 புள்ளிகள்)**

- மேன்மைப்பொருள்களின் நுகர்வானது நேர்க்கணிய வெளிவாரிகளை உருவாக்குவதாகப் பெரிதும் நம்பப்படுகிறது. இப்பொருள்களையும் சேவைகளையும் நுகர்வதன் சமூக நன்மையானது இவற்றை நுகர்வோர் அடையும் தனிப்பட்ட நன்மைகளைவிடக் கூடுதலாக இருக்கும்.

**(02 புள்ளிகள்)**

(iii)- **நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம்** என்பது புதிய நிதியாண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட எதிர்பார்க்கப்படும் அரசாங்க செலவீட்டு மதிப்பீடுகள் அரசாங்க வருமான மற்றும் கடன் பெறும் எல்லைகள் போன்றவற்றிற்கு அனுமதி பெறும் நோக்கில் ஒதுக்கீட்டுச் சட்டமூலமானது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். ஒதுக்கீட்டுச் சட்டமூலம் என்பது புதிய நிதியாண்டின் போது ஏற்படும் செலவினங்களை ஈடுசெய்ய திரட்டு நிதியிலிருந்து பணத்தை அரசாங்கம் பெற்றுக் கொள்ள அனுமதிக்கும் நிதிச் சட்டமூலமாகும்

- பாராளுமன்ற அனுமதியின் பின்னரே அரசாங்கம் திரட்டு நிதியிலிருந்து பணத்தை மீளப்பெறமுடியும். ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபின்னர் ஒதுக்கீட்டுச் சட்டம் என அழைக்கப்படும்.

**(02 புள்ளிகள்)**

- **இடைக்காலக் கணக்கு அறிக்கை அல்லது கணக்கு வாக்கெடுப்பு** என்பது எதிர்பாராத சம்பவங்களின் போதோ தேர்தல் நடைபெறும் போதோ அல்லது ஒரு காபந்து ( இடைக்கால )அரசாங்கம்பதவியில் இருக்கும் போதோ அரசாங்கம் பணத்தைப்பெற்றுக் கொள்ளும் பொருட்டு பாராளுமன்றத்தின் வாக்குகளைப் பெறுவதற்கான ஒரு சிறப்பு ஏற்பாடாகும்.

- **இடைக்காலக் கணக்கு அறிக்கை அல்லது கணக்கு வாக்கெடுப்பு** என்பது மூன்றுமாத காலப்பகுதிக்கு திரட்டு நிதியிலிருந்து பணத்தை மீளப் பெறுவதற்கான அனுமதியாகும். கணக்கு வாக்கெடுப்பு என்பது அரசாங்கம் பணத்தைச் செலவிடுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்படும் ஒரு இடைக்கால அனுமதியாகும். இதில் வருமானத்தைத் திரட்டிக்கொள்வதற்கான எந்தமுன்மொழிவும் இருக்காது.

**(02 புள்ளிகள்)**

(iv) வரியல்லா வருமான மூலாதாரங்கள்:

- வட்டிவருவாய்கள்
- வாடகை வருவாய்கள்
- அரசுடைமை வியாபார நிறுவனங்களிலிருந்தான இலாபங்களும் பங்கிலாபங்களும்
- மத்திய வங்கியின் இலாபங்கள்
- விற்பனைகளும் கட்டணங்களும்.
- சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள்

**(ஒவ்வொன்றிற்கும் தலா 01 புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள்)**

(v) - ஒரு பொருளின் அல்லது சேவையின் உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரிகள் உருவாகுமாயின் அது மிகையுற்பத்திக்கு இட்டுச்செல்லும் ஏனெனில் தாராள சந்தையில் இயங்கும் நிறுவனம் வெளிவாரிச் செலவுகளைக் கருத்திற்கொள்ளத் தவறுவதனாலாகும்.

- உற்பத்தியில் வெளிவாரிச் செலவுகள் இருக்குமாயின் தனியார் செலவுகளை விட சமூக செலவுகள் உயர்வாக இருக்கும். ஆனால் கட்டுப்பாடற்ற சந்தையில் உற்பத்தி தொடர்பான தீர்மானங்கள் முழு மையாக தனியார் நன்மைகள் மற்றும் தனியார் செலவுகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும். இதனால் மிக அதிகளவிலான வெளியீடு உற்பத்தி செய்யப்படும் (மிகையுற்பத்தி)

**(02 புள்ளிகள்)**

- இந்நிலைமையினைக் கீழே தரப்பட்டுள்ளவாறு ஒரு கேள்வி நிரம்பல் வரைபடத்தின் மூலம் காட்டப்படலாம்:

  வெளிவாரிச் செலவுகள் MPC மற்றும் MSC வளையிகளுக்கு இடையிலான செங்குத்துத் துாரத்தினால் காட்டப்படும்.

  வெளிவாரிச் செலவுகள் கருத்திற் கொள்ளப்படாதவிடத்து தாராள சந்தையின் சமநிலை வெளியீடு $Q_1$ ஆனது சமூகரீதியில் உத்தம உற்பத்தி மட்டமாகிய $Q_2$ விட உயர்வாக இருக்கும் $Q_1$ மற்றும் $Q_2$ இடை-யிலான தொகை வேறுபாடு மிகையுற்பத்தியின் அளவைக் குறிக்கும்.




**(சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)**
**(வரைபடத்தினை விளக்குவதற்கு 01 புள்ளி)**

| | | | |
|---|---|---|---|
| 8. | (i) | ஒப்பீட்டு நன்மையையும் போட்டி நன்மையையும் வேறுபடுத்துக. | (04 புள்ளிகள் |
| | (ii) | ஏற்றுமதி வருவாய்களில் துரித வளர்ச்சியை அடைவதில் இலங்கை எதிர்கொள்ளும் பிரதான தடைகள் யாவை? | (05 புள்ளிகள் |
| | (iii) | ஒரு நாட்டின் உத்தியோகபூர்வ சொத்து ஒதுக்குகள் என்பதனால் கருதப்படுவது யாது? அதன் பிரதான கூறுகளை பட்டியற்படுத்துக. | (05 புள்ளிகள் |
| | (iv) | ஒரு பொருளின் உற்பத்தியில் முழு நன்மையினை அடையாமல் ஒப்பீட்டு நன்மையை அடைய முடியுமா? புள்ளிவிபர உதாரணம் மூலம் உமது விடையை விளக்குக. | (06 புள்ளிகள் |

(i) - பொருளியலில் ஒப்பீட்டு நன்மை என்பது ஒரு நாடு மற்றொரு நாட்டை விட குறைந்த அமையச் செலவில் குறித்த ஒரு பொருளை அல்லது சேவையை உற்பத்தி செய்யும் ஆற்றலைக் குறிக்கும். ஒரு நாடு இன்னொரு நாட்டைவிட சகல பொருள்களையும் மிகவும் வினைத்திறனாக உற்பத்தி செய்ய முடியுமாயினும் (அதாவது முழு நன்மையினைக் கொண்டிருந்தாலும்) அவை இரண்டும் வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் பரஸ்பர நன்மையடையலாம்.

**(01 புள்ளி)**

- ஒப்பீட்டு நன்மையானது ஒருநாட்டின் நிலம் உழைப்பு மூலதனம் மற்றும் முயற்சியாண்மை போன்ற வளங்களின் அளவில் தங்கியுள்ளது. அத்துடன் கூடிச் செல்லும் அளவுத்திட்ட விளைவுகள், வட்டிவீதங்கள், நாணயமாற்றுவீதம் என்பனவும் ஒப்பீட்டு நன்மையை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்கின்றன.

**(01 புள்ளி)**

- போட்டி நன்மை என்பது ஒரு வியாபார நிறுவனம் தமது போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் தான் அனுபவிக்கும் மேலதிக அனுகூலத்தைக் கருதும். தமது வாடிக்கையாளருக்கு சிறந்த மற்றும் உயர்ந்த பெறுமதியினை வழங்குவதன் மூலம் இதனை அடையலாம். ஒரு நிறுவனம் தனது போட்டியாளர்கள் வாடிக்கையாளருக்கு வழங்கும் அதே நன்மைகளை குறைந்த செலவில் வழங்க முடியுமாயின் (செலவு நன்மை) அல்லது உயர்ந்த விலையை நியாயப்படுத்தக் கூடிய விதத்தில் தனது போட்டியாளர்களை விட மிக அதிகமான நன்மைகளையும் சேவைகளையும் வாடிக்கையாளருக்கு வழங்க முடியுமாயின்

(வேறாக்க நன்மை) அந்நிறுவனம் போட்டி நன்மையினைக் கொண்டுள்ளதாகக் கருதலாம்.

- இவ்வெண்ணக்கருவானது ஒரு தனிப்பட்ட நிறுவனத்திற்கும் முழு நாட்டிற்கும் ஏற்புடையதாகும். ஒரு நாட்டின் போட்டி நன்மையானது ஒரு சிறந்த பொருளாதாரத்திற்கு அதன் மலிவான விலைகொண்ட உழைப்பும் இயற்கைவளங்களும் அவசியமானவையல்ல என்னும் கருத்தியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நாடுகளின் தேசிய சுபீட்சம் அவற்றினால் உருவாக்கப்பட்டதேயன்றி பரம்பரை பரம்பரையாக வரும் ஒன்னறல்ல. பழம் பொருளியலாளர்கள் வலியுறுத்துவது போன்று அது ஒரு நாட்டின் இயற்கை வளக்கிடைப்பனவு அதன் ஊழியர் படை அதன் வட்டிவீதம் அல்லது அதன் நாணத்தின் பெறுமதி என்பவற்றிலிருந்து உருவாகுவதன்று

**(01 புள்ளி)**

- ஒரு நாட்டின் போட்டி நன்மையானது அந்நாட்டுக் கைத்தொழில்களின் புத்தாக்கம் மற்றும் மேம்படுத்தலுக்கான இயலளவில் தங்கியுள்ளது. உயர்மட்ட உற்பத்தித் திறன்இ உயர்மட்ட தொழில் நுட்பப் பயன்பாடுஇ குறைந்த விலைகளில் உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதில் உள்ள பேரம் பேசல் சக்திஇ மிகவும் பயனுறுதிவாய்ந்த விநியோக மார்க்கங்களை அடையக்கூடிய ஆற்றல்இ மீயுயர் தரத்திலான பொருளுற்பத்திஇ வர்த்தகக் குறியீடுகள்இ புலமைச் சொத்துக்கள் போன்றன போட்டி நன்மைக்கான முக்கிய மூலாதாரங்களாகும்

**(01 புள்ளி)**

(ii) - ஏற்றுமதிப் பொருள்களின் மிக வரையறுக்கப்பட்ட பன்முகப்படுத்தல்: 1990களின் நடுப்பகுதியிலிருந்து ஏற்றுமதி உள்ளடக்கமானது உறுதியாக இருந்துள்ளது. சில மரபுரீதியான பொருள்கள் ஆடைகள் தேயிலை மற்றும் இறப்பர் என்பவற்றுக்கு அப்பால் ஏற்றுமதிகள் பன்முகப்படுத்தப்படவில்லை.

- ஏற்றுமதிச் சந்தைகளின் குறைவான பரவலாக்கம்: ஐரோப்பாவும் அமெரிக்காவும் இலங்கையின் எற்றுமதிகளில் மூன்றில் இரண்டுபங்கிற்கு வகைகூறுகின்றன. மேலும் அண்ணளவாக 70% சதவீதமான தேயிலை ஏற்றுமதிகள் மத்திய கிழக்க நாடுகளுக்கும் பொதுநலவாய நாடுகளுக்கும் செல்கின்றன.

- ஏற்றுமதிக் கைத்தொழில்களில் குறைவான முதலீடுகள்: கிழக்காசியாவின் புதிய கைத்தொழில் மயநாடுகளில் (NICs) இயங்கியல் தன்மைவாய்ந்த துரித வளர்ச்சியடைந்த ஏற்றுமதித் துறையை உருவாக்குவதில் ஏற்றுமதி நோக்கிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் முக்கிய பங்காற்றின. ஆனால் இலங்கை இந்த முதலீட்டு வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதில் வெற்றியடையவில்லை.

- இலங்கையின் ஏற்றுமதிப்பொருள்களின் எளிமைத்தன்மை அதன் குறைவான தொழில்நுட்ப வல்லமைக்கு சான்று பகர்கிறது. இலங்கையின் தொழில் நுட்பமானது மேற்குலகநாடுகள் எளிமை யான தொழினுட்பத்திலிருந்து சிக்கலான தொழினுட்பத்திற்கு மாறியபோது பயன்படுத்திய தொழினுட்ப முறைகளைக் கடன் வாங்கியே தற்போதும் பயன்படுத்துகிறது.

- தற்போதைய பிரதான எற்றுமதிக் கைத்தொழில்கள் அவற்றின் உற்பத்திறன் நன்மைகளைவிட உழைப்பின் (சம்பளச்) செலவுகள் அதிகரித்துச் செல்வதால் நெருக்கடிக்குள்ளாகி வருகின்றன.

- உயர் செலவும் குறைந்த உற்பத்தித் திறனும் கொண்ட தேயிலை ஏற்றுமதித்துறை: உள்ளீடுகளின் விலையும் பயன்படுத்தப்படும் தொழினுட்பமும் (ஊழியச்செறிவுடையது) நிலத்தின் குறைவான உற்பத்தித் திறனும் (பழைய தோட்டங்கள் குறைந்த விளைச்சலைக் கொண்டவை) காரணமாக ஏனைய தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் உற்பத்திச் செலவுகள் உயர்வாக உள்ளன.

- குறைவடைந்து செல்லும் ஊழியப்படையும் அதிகரிக்கும் உழைப்பின்: தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்களை வைத்திருப்பது சவாலானதாக மாறிவருகிறது. பெருந்தோட்டத் தொழில் தொடர்பான சமூகபெறுமானங்கள்இ இளஞ்சந்ததியின் முன்னேறிய கல்வி அடைவுகள்இ பெருந்தோட்டங்களுக்கு வெளியில் காணப்படும் சமூக மதிப்பு மிக்க தொழில் வாய்ப்புகள் போன்ற பல்வேறு காரணிகளின் விளைவாக ஏற்பட்டதாகும்.

**(ஒவ்வொரு விடயத்திற்கும் தலா 01 புள்ளி வீதம் மொத்தம் 05 புள்ளிகள்)**

(iii)- சர்வதேசரீதியில் செலுத்தல்களை மேற்கோள்வதற்கான ஒரு மூலாதாரமாக பயன்படுத்தப்படும் நிதிச் சொத்துகள் உத்தியோகபூர்வ ஒதுக்குகள் எனப்படும்.

**(02 புள்ளிகள்)**

- உத்தியோகபூர்வ சொத்தொதுக்குகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:
  a. நாணயத் தங்கம்
  b. அந்நியச் செலாவணி
  c. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் (SDRs),
  d. சர்வதேச நாணய நிதியத்துடனான ஒதுக்குகள்
  e. சர்வதேச நாணயங்களிலான சந்தைப்படுத்தக் கூடிய பிணையங்கள்
  f. வெளிநாட்டு நாணயக் கடன்கள்

**(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி ஏதேனும் மூன்றிற்கு மொத்தம் 03 புள்ளிகள்)**

(iv) - முழுநன்மை என்பது ஒரு பண்டத்தின் உற்பத்தி தொடர்பில் ஒருநாடு ஏனைய ஒரு நாட்டுடன் ஒப்பிடுகையில் உயர் ( முழுமையான ) உற்பத்தித் திறனை அல்லது குறைந்த செலவினைக் கொண்டிருப்பதைக் குறிக்கும். எவ்வாறாயினும் ஒரு பொருளின் உற்பத்தியில் முழுநன்மையைக் கொண்டிருப்பது பரஸ்பர நன்மைவாய்ந்த வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான அவசியமான நிபந்தனையோ போதுமான நிபந்தனையோ அன்று.

**(01 புள்ளி)**

- உதாரணமாக ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் ஒப்பிடுகையில் எல்லாப் பொருள்களின் உற்பத்தி தொடர்பிலும் முழுநன்மையைக் கொண்டிருக்கலாம். ஆனால் அந்நாடு ஏனைய நாடுகளுடன் வர்த்தகத்தை மேற்கொள்வதன் மூலம் நன்மையடையலாம். சார்பளவில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் உற்பத்தியில் ஒப்பீட்டு ரீதியான நன்மையைக் கொண்டிருப்பதே இதற்கான காரணமாகும். எனவே முழுநன்மையைக் கொண்டிருப்பது வர்த்தகம் இடப்பெறத் தேவையான நிபந்தனையன்று.

- அவ்வாறே குறித்த நாடு ஒப்பீட்டு ரீதியில் (ஒப்பீட்டு நன்மை) ஒரு பொருளின் உற்பத்தியில் நன்மையைக் கொண்டிருக்காமல் அப்பொருளின் உற்பத்தியில் முழு நன்மையை மாத்திரம் கொண்டிருப்பது வர்த்தகம் நடைபெறப் போதுமான நிபந்தனையன்று.

**(01 புள்ளி)**

- **புள்ளிவிபர உதாரணம்:**
பின்வரும் அட்டவணையானது இந்தியா இலங்கை ஆகிய நாடுகளில் ஒரு கிழமை நேர உழைப்பைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படக்கூடிய ஆடை மற்றும் சைக்கிள்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது:

| பொருள் | இந்தியா | இலங்கை |
|---|---|---|
| ஆடைகள் (அலகுகள்) | 12 | 8 |
| சைக்கிள்கள் (அலகுகள்) | 6 | 2 |

**(புள்ளிவிபர உதாரணத்திற்கு 02 புள்ளிகள்)**

- இவ்வுதாரணத்தின்படி இவ்விருபொருள்களின் உற்பத்தி தொடர்பிலும் இலங்கைக்கு முழுநன்மை கிடையாது. இரு பொருள்கள் தொடர்பிவும் இந்தியாவுக்கு முழு நன்மையுண்டு. எனினும் இலங்கைக்கு ஆடைஉற்பத்தி தொடர்பில் ஒப்பீட்டு நன்மையுண்டு. ஏனெனில் இலங்கையில் ஓரலகு ஆடையை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு 0.25 சைக்கிள்களாகும். ஆனால் இந்தியாவில் இதற்கான அமையச்செலவு 0.5 சைக்கிள்களாகும்.

**(அமையச் செலவைக்கணிப்பீடு செய்வதற்கு 02 புள்ளிகள்)**

**9.** (i) பொருளாதார வளர்ச்சியின் பிரதான மூலாதாரங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) அபிவிருத்தியின் ஓர் அளவையாக மனித அபிவிருத்திச் சுட்டெண்ணில் காணப்படும் பிரதான குறைபாடுகள் யாவை? (05 புள்ளிகள்)

(iii) "இலங்கையில் வறுமையை குறைப்பதில் சமுர்த்தித் திட்டத்தின் தாக்கம் சிறியதாகவும் குறைந்து செல்லும் தன்மை கொண்டதாகவும் இருந்தது." உலக வங்கியின் இக் கூற்றுடன் நீர் உடன்படுவீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக. (05 புள்ளிகள்)

(iv) இலங்கையில் குடித்தொகை மாற்றங்கள் வயது முதிர்ந்தோருக்கான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பில் எவ்வாறு புதிய சவால்களை ஏற்படுத்துகின்றன என்பதை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(i) - **வளக்கிடைப்பனவு:** இயற்கை மூலதனம், பௌதீக மூலதனம், மனித மூலதனம் மற்றும் சமூக மூலதனம்

- **உற்பத்தித் திறன்:** தொழில் நுட்ப முன்னேற்றம், புத்தாக்கம், ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றம் அத்துடன் முகாமைத்துவ மேம்பாடுகள்

- **பொருளாதார உறுதிநிலை** (உகந்த பேரினப்பொருளாதார அடிப்படைகள்)

- **உகந்த வியாபார சூழல்:** உட்கட்டமைப்புஇ நிதி மற்றும் வங்கிக் கட்டமைப்பின் வினைத்திறன், சந்தைகளின்வினைத்திறன்இசந்தைஊக்குவிப்புகள், நிறுவனங்களின் உற்பத்தித் திறனைப்பாதிக்கும் வரிவிதிப்பு மற்றும் நிருவாக ஒழுங்குமுறைகள்.

- **வர்த்தகத்திற்கும் முதலீட்டிற்கும்** நாட்டின் திறந்த தன்மை

- **கல்வி முறைமை:** வினைத்திறன் மற்றும் பொருத்தப்பாடு

- **அரசியல் உறுதிப்பாடும் வன்முறைகளற்ற** சூழலும்

- **நல்லாட்சி:** பொறுப்புக் கூறல்இ சட்டவாட்சி, அரசாங்கத்தின் வினைத்திறன், ஊழலைக் கட்டுப்படுத்தல்

- **முயற்சியாண்மை** தொடர்பான கொள்கைகள்

**(ஒருவிடயத்திற்கு 01 புள்ளி எதேனும் நான்கு விடயங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

(ii) - மனித அபிவிருத்திச் சுட்டெண் HDI என்பது தனிஒருநாட்டிற்கான கூட்டுக் குறிகாட்டியாகும். எனவே இது நாட்டுக்குள் இடம்பெறும் அபிவிருத்தியின் வேறுபட்ட சதவீதங்களையோ பாரம்பரிய கிராமிய சமூகத்திற்கும் நகர்ப்புற சமூகத்திற்கும் ஏற்றத்தாழ்வுகளையோ வேறுபடுத்திக் காட்டாது

- மனித அபிவிருத்தியின் எல்லா அம்சங்களையும் HDI குறிகாட்டி உள்ளடக்காது. அடிப்படை இயலு- மையின் முப்பரிமாணங்கள் மீதே அது கவனஞ்செலுத்துகிறது. ஏனைய முக்கிய அம்சங்களான பங்குபற்றல், அரசியல் சுதந்திரம், மனித பாதுகாப்பு என்பனவும் மனித அபிவிருத்தியில் முக்கியமாகும்.

- சுட்டெண்ணில் உள்ளடங்கும் மூன்று கூறுகளுக்கும் சமமான முக்கியத்துவம் (நிறை) கொடுக்கப் பட்டுள்ளது. எழுந்தமானமாக சமமான நிறையிடல் கொடுக்கப்பட்டுள்ளமை பற்றிய விமர்சனங்கள் உள்ளன.

- அபிவிருத்தி என்பது பெரும்பாலும் மனித சுதந்திரத்தோடு தொடர்பு பட்டது ஆயினும் இக்குறிகாட்டி அதனை நேரடியாக அளவிடவில்லை. உதாரணமாக இணையத்தைத் தொடர்பு கொள்வதற்கான வசதி பலராலும் ஒரு சுதந்திரமாகக் கருதப்படுகிறது. இதற்கான காரணம் இணையவசதி மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கு இட்டுச்செல்வதாகக் கருதப்படுவதாகும்

- வாழ்க்கைத்தரம் பற்றி அளவீடு செய்ய குறுகிய அளவையாகிய தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி கருத்திற் கொள்ளப்படுவதால் வருமானப் பங்கீடுபற்றிய எவ்வித குறிப்பும் இதில் கிடையாது

- தரத்தின் வகிபாகம் பற்றிய எவ்வித கரிசனையும் இக்குறிகாட்டியில் இல்லை. (அதாவது பாடசாலைக் கல்வியின் தரம் மற்றும் சுகதேகியாக மேலும் ஒரு ஆண்டு உயிர்வாழும் ஆற்றல் போன்றன பற்றிய தகவல்கள்கள் ஏதும் இல்லை)

- HDI அதன் மூன்று அம்சங்களின் சார்பளவு முக்கியத்துவம் பற்றி ஆய்வு செய்யவோ அல்லது ஒருநாட்டின் HDI குறிகாட்டி குறிப்பிட்ட காலப்பகுதியில் மாற்றமடைவதற்கான காரணங்கள் பற்றி ஆய்வு செய்யவோ அனுமதிப்பதில்லை. உதாரணமாக அத்தகைய ஒரு மாற்றம் தலைக்குரிய மொத்த தேசிய வருமானத்தின் மாற்றம் காரணமாகவோ அல்லது வளர்ந்தோர் எழுத்தறிவில் ஏற்பட்ட மாற்றம் காரண-மாகவோ ஏற்பட்டிருக்கலாம்.

**(ஒருவிடயத்திற்கு 01 புள்ளி. எதேனும் ஐந்து விடயங்களுக்கு மொத்தம் 05 புள்ளிகள்)**

(iii)- சமுர்த்தித் திட்டம் 1995 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. பொதுமக்களின் பங்குபற்றலுடன் கூடிய அபிவிருத்தியின் மூலம் வறுமையை ஒழிப்பதே இதன் முக்கிய குறிக்கோளாகும். சமுர்த்தித் திட்டத்தின் முக்கிய கூறுகள்:

- பயனாளியாகத் தகுதியான வீட்டுத்துறையினருக்கு உணவு முத்திரைகளை வழங்குவதற்கு சமுர்த்தித் திட்டத்தின் நிதியில் 80 சதவீதம் செலவாகிறது. 200 ரூபா தொடக்கம் 1, 500 ரூபா பெறுமதியான உணவுமுத்திரைகள் மாதாந்தம் பயனாளிக் குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

- பயனாளிகளுக்கு சமுர்த்தி வங்கிகளுடாக சேமிப்பு மற்றும் கடன் வசதிகள் வழங்கப்படும். கடன்கள் வியாபாரங்களை விருத்தி செய்யவும் தொழில்முயற்சிகளை ஆரம்பிக்கவும் வழங்கப்படும்.

- வேலை வாய்ப்பு மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டங்களுடாக சமூக உட்கட்டமைப்புகளை புனரமைப்பதற்கும் முயற்சிக்கப்பட்டது. உற்பத்தித் திறன் விருத்திப்பயிற்சிகள், கணக்கியல் பயிற்சிகள், நிறைவேற்றுக் குழுப்பயிற்சி மற்றும் வளஅபிவிருத்திப் பயிற்சி என்பன இதில் உள்ளடங்கும் - 2019 ஆண்டு பாதீட்டின் ஒரு முக்கிய திட்டமாக 600,000 உள்ளடக்கும் வண்ணம் சமுர்த்தித் திட்டத்தை விரிவுபடுத்துவதாகும்.

- சமுர்த்தித் திட்டம் நாட்டின் இந்த நாட்டின் மிகப்பெரிய சமூக நலன்புரித் திட்டமாகும் 2017 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு 43 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. சுமார் 1.4 மில்லியன் பயனாளிக் குடும்பங்கள் இதன் நன்மைகளைப் பெற்றன.

**(02 புள்ளி)**

- இத்திட்டம் பற்றி ஒரு உலகவங்கி அறிக்கை “வருமானப்பங்கீடு பற்றிய களஆய்வுகளின்படி சமுர்த்தித் திட்டமானது வினைத்திறனான ஒரு மாற்றல் திட்டமாக உருவெடுக்கவில்லை. இது இலக்குக் குழுக்களை நோக்கி செல்வதில் ஓரளவுக்கு வெற்றிபெற்றுள்ளது. ஆனால் அதன் வளங்களில் பெரும்பகுதியை வறியவர்கள் அல்லாதவர்களை நோக்கியே நகர்த்தியுள்ளது” என்று முடிவு செய்கிறது

- வறிய குடும்பங்களின் வரவு செலவுகளோடு ஒப்பிடுகையில் சமுர்த்திக் கொடுப்பனவுகள் அவர்களின் வாழ்க்கையில்பெரியமாற்றத்தைஏற்படுத்துமளவுக்குபோதியதாகஇல்லை. 2012/13இல்இலங்கையின் மிகவறிய 20 சதவீத குடும்பங்களின் நுகர்வில் 1.7% பங்களிப்பு மாத்திரமே சமுர்த்தித்திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது. வேறுவார்த்தைகளில் கூறுவதாயின் சமுர்த்திப் பயன்களை குடும்ப நுகர்வுச் செலவீட்டிலிருந்து கழித்தால் 2020 தேசிய வறுமை வீதம் 2.1% புள்ளிகளால் அதிகரிக்கும். ஆனால் 2012/13 இது 0.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

- 2007,ஆண்டில் வறுமை ஆய்வுகளுக்கான நிலையம் (CEPA) மேற்கொண்ட ஆய்வில் சமுர்த்தி உணவு முத்திரை வழங்குந்திட்டம் 80% வளங்களைப் பயன்படுத்திய போதிலும் நாட்டின் மிகவறிய 25% சதவீத சனத்தொகையில் 40% சதவீதத்தினரைச் சென்றடையாமல் அவர்களுக்கு மேல் வருமா-னம் பெறும் மூன்று காற்பகுதியினரில் சுமார் 44% சதவீதத்தை நோக்கிச் சென்றுள்ளதாக முடிவுக்கு வந்தது. ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளபடி ஒவ்வொரு வருமானக்காற் பகுதிகளில் உள்ளவர்களும் கணிசமானளவு சமுர்த்தி நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

  தசமணைகளின் அடிப்படையில் நோக்குமிடத்து மூன்றாம் மற்றும் பத்தாம் வருமானப் தசமணைகளுக்கு இடைப்பட்ட தசமணைகளில் உள்ள சமுர்த்திப் பயனாளிகள் நாட்டின் தற்போதைய தேசிய வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ளனர். தேசிய வறுமைக்கோட்டிற்கு இரண்டாந்தசமணையில் அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

- கிராமிய மட்டத்திலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பக்கச்சார்பு நடவடிக்கைகள் இவ்வாறான இலக்குப் பிழைகள் ஏற்பட பிரதான காரணங்களில் ஒன்றாகும்.

- சமுர்த்தித்திட்டத்தின் இலக்குப்படுத்தல் உள்ளூர் அரசியல் வாதிகளினதும் அவர்களது ஆதரவாளர்களினதும் செல்வாக்குக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சமுர்த்தி உத்தியோகத்தர்களில் பலர் அரசியல் நியமனங்களாக இருப்பதும் இதற்கான காரணமாகும்

**(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி. ஏதேனும் மூன்று விடயங்களுக்கு மொத்தம் 05 புள்ளிகள்)**

(iv)- இலங்கை எதிர்நோக்கும் குடித்தொகை மாற்றங்கள் தீவிரமானவையாகும். குடித்தொகை மூப்படைதல் உலகமுழுவதும் எதிர்நோக்கப்படும் ஒரு பிரச்சினையாகும் ஆனால் இலங்கையில் அது பாரிதாகவுள்ளது. அபிவிருத்தி அடையா உலகில் மூப்படையும் சனத்தொகைகளில் இலங்கையின் சனத்தொகையும் ஒன்றாக உள்ளது மட்டுமன்றி அதிவிரைவாக முப்படையும் சனத்தொகை கொண்ட நாடாகவும் உள்ளது. இலங்கையின் சனத்தொகையில் 60வயதுக்கு மேற்பட்டோரின் சதவீதம் 9.2 % சதவீதமாக இருந்தது 2050இல் இது 30% ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(01 புள்ளி)**

- இலங்கை தற்போது தீவிரமான குடித்துதொகை மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. அதன் குடித்தொகை மூப்படைந்து வரும் அதேவேளை இவர்களுக்கு ஆதரவளிக்க நாட்டில் காணப்படும் நிறுவனரீதியாக கட்டமைப்புகளும் சேமிப்புகளும் வரையறுக்கப்பட்டதாகவுள்ளன. சேமிப்பு ஓய்வூதியங்கள், நீண்டகாலப் பராமரிப்பு என்பன போதியளவில் விருத்தி செய்யப்படவில்லை

- அரசதுறை ஊழியர்களுக்கான ஓய்வூதியம் ஓய்வின் பின் அவர்களுக்கு நிச்சயிக்கப்பட்ட ஒரு நிதி ஆதரவை வழங்குகிறது. ஆனால் அதற்கு ஆகும் செலவு எதிர்வரும் வருடங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 1.4 சதவீதமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**(01 புள்ளி)**

- ஊழியர் சேமலாப நிதி என்பது முறைசார்ந்த தனியார்துறை ஊழியர்களுக்கான தொழில் வழங்குநரை அடிப்படையாகக் கொண்ட ஒரு சேமிப்புத்திட்டமாகும். நாட்டின் மொத்த தொழிற்படையில் மூன்றில் ஒரு பங்கினரை இது உள்ளவாங்கியுள்ளது. சார்பளவில் இது முறைசார்ந்தத்துறையின் ஊழியர்களின் கணிசமான பகுதியினரை உள்ளடக்கியுள்ள போதிலும் ஊழியர்களின் ஓய்வுகாலத்திற்குத் தேவையான நிதிப்படுத்தலில் வரையறுக்கபட்ட ஒரு பங்களிப்பையே வழங்குகிறது.

**(01 புள்ளி)**

- பங்களிப்புச் செய்யப்படாத சமூக ஓய்வூதியத்திட்டம்இ முதியோருக்கான கொடுப்பனவுகள் என்பன 70 வயதுக்கு மேற்பட்ட வயோதிகருக்கு ஓரளவு நிதிப்பாதுகாப்பு வழங்குகிறது. ஆனால் இதில் உள்வாங்கப்படத் தகுதிவாய்ந்தவர்களின் ஒரு நீண்டகால காத்திருப்புப் பட்டியல் உள்ளது. சுமார் 400,000 பேர் 2,000 ரூபா மாதாந்த உதவு தொகை பெறுகின்றனர். சுமார் 100,000 பேர் இதனைப் பெறத்தகுதியுடையோராயினும் அரசபாதீட்டு வரையறை காரணமாக இன்னும் உள்வாங்கப்படவில்லை. இதன் நன்மைகள் ஓரளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. இதில் கிடைக்கும் உதவு தொகை யினளவு வறுமைக்கோட்டின் அரைப்பங்காகும். எனவே இத்தொகையானது வறிய முதியவர்கள் பல-ரின் வாழ்க்கையை நிலைபேறுடையதான மாற்றப் போதமானதல்ல.

**(01 புள்ளி)**

- நாடு சார்பளவில் சிறந்த சுகாதாரப் பாதுகாப்பு சேவைத்துறையைக் கொண்டுள்ள போதிலும் தொற்றாநோய் சிகிச்சைகள் நீண்டகாலப் பராமரிப்பு போன்ற வயதுமுதிர்ந்த நோயாளிகளின் தேவை-களைப் பூர்த்தி செய்யுமளவுக்கு சீராக்கப்படவில்லை

**(01 புள்ளி)**

- முதியவர்கள் பலருக்கு குடும்பமே பிரதான ஆதரவாக உள்ளது. ஆனால் மரபு ரீதியான இவ்வாதரவுப் பொறிமுறை சிதைவடைந்து வருவதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன. முதியவர்களுக்கு பிர-தானமாக பராமரிப்பை வழங்கும் பெண்கள் தொழிலிலும் ஈடுபட்டுக்கொண்டு சிறுவர்களையும்இ முதியவர்களையும் கவனிக்கும் பொறுப்பையும் சுமப்பதால் அவர்களது வாழ்வில் குறிப்பிடத்தக்களவு மனஅழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர்.

- குடும்பங்களே தொடர்ச்சியாக முதியோருக்கான கவனிப்பை வழங்குமாயின் அக்கவனிப்பை வழங்குபவர்கள் ஊழியச் சந்தையில் பங்குபற்றமுடியாமல் போகும் அமையச் செலவை எதிர்கொள்வர். அதிக எண்ணிக்கையிலான முதியவர்களுக்கு நீண்டகாலக் கவனிப்பு வழங்கும் குடும்பங்களுக்கு உதவுவதும், செலவுத்திறன் வாய்ந்த சமூக அடிப்படையிலான சமூகபாதுகாப்பு சேவைகளும், முதியோருக்கான ஓய்வூதியங்கள், பாதுகாப்பு வலைப்பின்னல் போன்ற வருமானப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் வரிவாக்கப்படுவது அவசியமாகும்.

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் மொத்தம் 06 புள்ளிகள்)**

**10.** (i) நான்காவது கைத்தொழிற் புரட்சி (4IR) என்றால் என்ன? இலங்கை அதனை எதிர்கொள்ளத் தயாராகவுள்ளதா? உமது விடையை விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) இலங்கையின் மீது கோவிட்-19 கொள்ளை நோய் ஏற்படுத்தியுள்ள பொருளாதாரத் தாக்கத்தை சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

(iii) "தொடர்ச்சியான காலப்பகுதிகளில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியைப் பேணிச் செல்ல முடியாத நிலையில் இலங்கை உள்ளது." இக்கூற்றினை நிரூபித்து இலங்கைப் பொருளாதாரத்தின் குறைவான செயலாற்றத்திற்கான காரணங்களைத் தருக. (05 புள்ளிகள்)

(iv) "சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்தி அனுபவங்கள் தெளிவாக வெளிப்படுத்துவது யாதெனில் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் பெரும்பாலும் அவற்றின் வினைத்திறனின் அடிப்படையிலன்றி சித்தாந்த அடிப்படையிலேயே கருத்திற் கொள்ளப்பட்டன என்பதாகும்." உதாரணங்களுடன் உமது விடையை விளக்குக. (05 புள்ளிகள்)

(i) - நான்காவது கைத்தொழிற் புரட்சி என்பது விடயங்களின் இணையம் (Internet of Things -IoT), இயந்திர மனிதர்கள் (robotics), மெய்நிகர் உண்மை (virtual reality -VR), முப்பரிமாண அச்சிடல் (3D printing) மற்றும் செயற்கை நுண்ணறிவு (artificial intelligence - AI) போன்ற சீர்குலைக்கும் தொழில் நுட்பங்களும் (disruptive technologies) போக்குகளும் நாம் வாழும் விதத்தையும் வேலைசெய்யும் விதத்தையும் மாற்றியமைக்கும் வகையிலான தற்போதுள்ளதும் விருத்தியடைந்து வருவதுமான புறச்சூலைக்கருதும்.

**(01 புள்ளி)**

- நவீன வாழ்க்கையில் இன்றியமையாததாகக் கருதப்படும் பல பொருள்கள் சேவைகளின் பின்னணியிலுள்ள ஒருமித்தபலம் நான்காவது கைத்தொழிற் புரட்சியே ஆகும். தடங்காட்டி எனப்படும் (GPS) முறைமை ஒரு இடத்தைச் சென்றடைவதற்கான விரைவான சாலையை நமக்கு விதந்துரைப்பதும் அப்பிள் நிறுவனத்தின் பேச்சொலி மூலம் செயற்படும் சிறி (Apple's Siri), போன்ற மெய்நிகர் உதவியாளர்களும்இ தனிப்பயனாக்கப்பட்ட நெற்பிலிக்ஸ் (personalized Netflix) பரிந்துரைகள் மற்றும் உங்கள் முகத்தை இனங்கண்டு உமது நண்பரின் புகைப்படத்துடன் இணைக்கும் பேஸ்புக்கின் இயலுமை போன்றனவும் இவ்வகையினதாகும்.

- கைத்தொழிற்புரட்சி 4.0 (4IR) பொருளாதாரத்திலும்இ சமூக வாழ்க்கையிலும்இ சுகாதாரம்இ கல்விஇ வாழ்க்கை முறைஇ வேலைவாய்ப்பு மற்றும் திறன் விருத்தி போன்றவற்றில் முன்னுதாரணமான மாற்றங்களை ஏற்படுத்தியது. இது மனித வேலைப்படையை தானியங்கிகளுடனும் இயந்திரமனிதர்களைக் கொண்டும் பதிலீடு செய்யும் முன்னேற்றகரமான தொழில்நுட்ப அபிவிருத்திகளால் ஏற்பட்டது.

**(01 புள்ளி)**

- ஆயினும் இலங்கையானது கட்டமைப்பு சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் நாளாந்த வாழ்க்கையின் சமூக பொருளாதார விடயங்களில் நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்குவதை ஊக்குவிக்கும் உரிய சூழலை இதுவரையிலும் உருவாக்கவில்லை. எனவே நான்காம் கைத்தொழிற்புரட்சியில் இலங்கையின் வெற்றியானது பரந்த அடிப்படையிலான கட்டமைப்பு ரீதியானதும் நிறுவன ரீதியானதுமான தடைகளைக் களைவதிலும் அதற்கடுத்தபடியாக அனைத்தையும் உள்ளடக்கிய உயர்சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைவதில் பொருளாதாரத்தின் ஒவ்வொரு உபதுறையையும் கவனமாக ஆய்வு செய்து அவற்றில் 4IR இனை எவ்வாறு பயன்படுத்தலாம் என்று அடையாளங்காண்பதிலும் பெருமளவில் தங்கியுள்ளது.

- இலங்கை இன்னமும் இரண்டாம் கைத்தொழிற் புரட்சி அல்லது 2IR இல் உள்ளது. நான்காம் கைத்தொழிற் புரட்சியில் இலங்கை இணைந்துகொள்ள வேண்டுமாயின் அது மிகப்பெரிய ஒரு பாய்ச்சலை மேற்கொள்ள வேண்டியிருக்கும். அதன் மிகவும் அடிமட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்களவான 4IR தொழினுட்பங்கள் கணணிப்பயன்பாட்டிலும் IoT இலும் தோன்றியுள்ளன. எனவே இலங்கையின் குறைவான கணணி எழுத்தறிவு வீதமும் இணைய வசதிகளை அடைய முடியாமையும் நாடு 4IR முன்னேற்றங்களை உள்வாங்கிக் கொள்வதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் வெளிப்படுத்துவதிலும் சவாலான நிலைமையை உருவாக்குகிறது. இலங்கையின் சனத்தொகையில் 34% சதவீதத்தினர் மாத்திரமே இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். இக்குறைவான இணையப்பயன்பாடு 2018இல் இலங்கையின் 22.9% சதவீத குறைந்த கணணி எழுத்தறிவு வீதத்துடன் ஒத்துப்போகிறது.

- பால்நிலை மற்றும் துறைசார் ஏற்றத்தாழ்வுகள் போன்ற கட்டமைப்பு சார் விடயங்களே தொழில்நுட்ப உட்பட்டமைப்புகளிலும் அவற்றின் பயன்பாட்டிலும் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட முக்கிய காரணங்களாகும். உதாரணமாக இணையப்பயன்பாட்டில் பால்நிலை வேறுபாடு 40% சதவித அளவுக்கு உயர்வாகவுள்ளது. மேலும் தகவல் தொழில் நுட்ப எழுத்தறிவில் நகர்ப்புற (36.9%), கிராமப்புற (22.0%), தோட்டப்புறங்களுக்கிடையில் (8.6%) ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

- மனித மூலதனத்தின் தயார்நிலையியை அடைய ஒரு பொருளாதாரம் உயர்திறமை வாய்ந்த ஏககாலத்தில் பலவிடயங்களை செயற்படுத்தக்கூடிய ஊழியப்படையைக் கொண்டிருப்பது அவசியம். இலங்கை உயர் எழுத்தறிவு கொண்ட நாடாகக் கருதப்பட்டது. ஆனால் 4IR யுகத்தில் அடிப்படை எழுத்தறிவும் எண்ணறிவும் எவ்விதத்திலும் போதியதாக அமையாது.

- இலங்கையின் 20வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையில் 10% சதவீதத்தினர் மாத்திரமே அவர்களது தொழிலுடன் தொடர்புடைய தொழில்நுட்பப்பயிற்சியினை அல்லது தொழில்சார் பயிற்சியினைப் பெற்றுள்ளனர். பல்கலைக்கழகங்களிலும் கூட 4IR இன் முன்னரிமைப் பாடப்பரப்புகளாகிய விஞ்ஞானம்இ தொழில் நுட்பம்இ பொறியியல் மற்றும் கணிதம் போன்ற பாடப்பரப்புகளுடன் ஒப்பிடுகையில் பெரும்பான்மையானோர் கலைத்துறை சார்ந்த பாடங்களையே கற்கின்றனர். பாடசாலை மட்டத்திலும் மேற்படி முன்னுரிமைப் பாடங்களை கற்பிப்பதற்கான ஆசிரியவளம் பற்றாக்குறையாக உள்ளது. இது மனித மூலதனத் தயார்நிலை குறைந்த மட்டத்தில் உள்ளதைக் காட்டுகிறது.

- இலங்கையில் சுமார் 6.7% சதவீத கைத்தொழில் பெறுமதிச்சேர்க்கை மட்டுமே இடைநிலை அல்லது உயர்நிலை தொழினுட்ப கைத்தொழிற் சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் 4IR காலப்பகுதியில் இக்கைத்தொழில்களில் பல முடங்கிவிடும் அபாயம் உள்ளது. உதாரணமாக ஆடைதயாரிப்புத்துறை போன்றன இத்தகைய தொழில் நுட்ப இடையுறுகள் காரணமாக பாதிக்கப்படலாம்

- இலங்கையின் சேவைத்துறையின் வளர்ச்சியானது போக்குவரத்து சில்லறை வர்த்தகம் போதன்ற வணிகமல்லாத் துறைகளை மையப்படுத்தியதாகவே உருவாகியுள்ளது. அவை இதுவரையில் பிரதானமாக மாற்றங்களுக்கு உட்படாத நிலையில் தானியங்கி வாகன சாரத்தியம் போன்ற 4IR தொழினுட்பங்கள் ஊழிய சந்தையில் பாதிப்புகளை ஏற்படுத்தலாம்

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் மொத்தம் 05 புள்ளிகள்)**

(ii) - இலங்கையில் கோவிட்19 இன் பரவல் ஏற்கெனவே சவால்மிகுந்த நிலையிலுள்ள பேரினப் பொருளாதார சுழலில் குறைவான வளர்ச்சி வீதத்தையும் அதிகரித்த இறைசார் அழுத்தங்களையும் ஏற்படுத்தியுள்ளது. கோவிட் 19 இலங்கையின் உள்நாட்டில் மாத்திரமன்றி அதன் ஏற்றுமதிச் சந்தைகளாகிய அமெரிக்கா ஐரோப்பாவிலும் சீனாவிலும் பாதிப்புக்களை எற்படுத்தியுள்ளது.

- ஏற்றுமதி வருவாய்கள் குறைவடைவதனாலும் தனியார் நுகர்வும் முதலீடும் குறைவதனாலும் இலங்கையின் வளர்ச்சி பாதிக்கப்படலாம். ஆசிய அபிவிருத்தி வங்கியின் கணிப்பீட்டின்படி 2020ல் பொருளாதாரம் 5.5 சதவீதத்தினால் சுருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
பொருளாதார நடவடிக்கைகளின் முடக்கநிலை தொழில் இழப்பிற்கும் வருமான இழப்பிற்கும் இட்டுச் செல்லலாம். 70 சதவீதமான தொழிற்படையினர் முறைசாராத்துறையிலேயே தொழில் புரிகின்றனர். இவர்கள் தொழிற்பாதுகாப்பு அற்றநிலையில் உள்ளனர்.

- இலங்கை போன்ற சிறிய பொருளாதாரங்கள் நுண்ணியஇ சிறிய மற்றும் நடுத்தரக் கைக்தொழில்களைக் கொண்டுள்ளன. அந்நியச்செலாவணிஉழைப்புக்கு ஏற்றுமதிவருவாயில் தங்கியுள்ள நிலையில் கடன்களை முகாமை செய்ய வேண்டியுள்ளதுடன் நிதிநெருக்கடிகளையும் சமாளிக்கவேண்டியுள்ளது

- உலகப் பொருளாதாரப் பின்னடைவானது இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான கேள்வியில் பாதிப்பை ஏற்படுத்தலாம் இதனால் தொழில் இழப்புகள் அதிகரிக்கலாம். ஐரோப்பிய ஒன்றியம் இங்கிலாந்து அமெரிக்கா போன்ற ஏற்றுமதிச் சந்தைகளில் இலங்கைப் பொருள்களுக்கான கேள்வி வீழ்ச்சியடையலாம்

- சீனாவின் பொருளாதாரப் பின்னடைவு இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீட்டை தீவிரமாகப் பாதிக்கலாம். சீனா இலங்கையின் பிரதான எற்றுமதிச் சந்தையல்ல. ஆயினும் அது இலங்கையின் மூன்றாவது இறக்குமதி மூலாதார நாடாகும். அத்துடன் சீன சுற்றுலாப்பயணிகள் அதிகளவில் இலங்கைக்கு வருகின்றனர். அந்நாட்டின் பொருளாதாரப் பின்னடைவு இலங்கையையும் பாதிக்கலாம்

- சுற்றுலாத்துறை இலங்கையின் மூன்றாவது வருமான மூலாதாரமாகும். கோவிட் 19 நோயின் காரண-மாக இத்துறை ஏற்கெனவே மோசமாகப்பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு விஜயம் செய்யும் சுற்றுலாப்பயணிகளின் சொந்த நாடுகளில் பயணத்தடைகளும் கட்டுப்பாடுகளும் ஏற்கெனவே விதிக்கப்பட்டுள்ளன

- சுமார் ஐந்து இலட்சம் தொழிலாளர்களைக் கொண்டுள்ள ஆடைதயாரிப்புத் துறை கணிசமான எண்ணிக்கையில் தொழிலாளர்களை பணிக்குறைப்புச் செய்துள்ளது.

- நிச்சயமற்ற சர்வதேச நிதி நிலைமைகள் காரணமாக நாடு நிதிச்சந்தைகளை அடிக்கடி நாட வேண்டிய நிலையில் உள்ளது. உயர்ந்தமட்டத்திலுள்ள பற்றாக்குறையும் அதிகரிக்கும் கடன்களும் சந்தை நிலை மைகளை மோசமாக்கலாம்.

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் மொத்தம் 05புள்ளிகள்)**

(iii) - இலங்கையில் இதுவரை நிலையேறுடையதும் துரிதமானதுமான பொருளாதார வளர்ச்சி ஏற்படவேயில்லை. சுதந்திரமடைந்து 70 ஆண்டுகளின் பின்னரும் வருடாந்த சராசரி வளர்ச்சி வேகம் சுமார் 4 சதவீதமாக இருந்துள்ளது. உயர்வளர்ச்சி வீதங்கள் ஒரு சில ஆண்டுகளில் மட்டுமே அவதானிக்கப்பட்டன.

- 1950களில் பொருளாதார வளர்ச்சி 3% ஆகவும் 1960 களில் 4.7% ஆகவும் இருந்தது. தீவிரமான உள்நாட்டு வரையறைகள் காரணமாக 1970களில் வளர்ச்சி 3.0% ஆக இருந்தது. 1970-1975 காலப்பகுதியில் இது 2.9% ஆக அவதானிக்கப்பட்டது. வருடாந்த வளர்ச்சி வீதம் 1980களில் 4.3% ஆகவும் 1990களில் 5.2% ஆகவும் அதிகரித்தது. புதிய நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தத்தில் வளர்ச்சி 5% ஆக இருந்தது. 2010-2014 காலப்பகுதில் இது 5.4% ஆக இருந்து அதன்பின்னர் 2015-2018 காலப்பகுதியில் 3.5% ஆக வீழ்ச்சியடைந்தது

- 2009 இல் போர்முடிவுற்ற பின்னர் துரித பொருளாதர விரிவாக்கம் ஏற்பட்டது. 2010ல் பொருளாதாரம் 8மூ வளர்ச்சியையும் 2011இல் 8.4% வளர்ச்சியையும் கண்டது. 2010-2012 ஆண்டுகளில் வளர்ச்சி 7.2மூ ஆக இருந்தது. வடக்கு கிழக்குப் பகுதிகளில் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கம், மீள்கட்டுமானம், சுற்றுலாப்பயணிகளின் அதிகரித்த வருகை என்பன இவ்வளர்ச்சியின் பின்னணியில் இருந்தன. எவ்வாறாயினும் மேற்படி வளர்ச்சி நீடிக்கவில்லை. பொருளாதாரத்தின் உற்பத்தி இய லளைவு அதிகரிக்கப்படாமையும் வர்த்தகம் செய்யக்கூடிய பொருள்களின் உற்பத்தி விரிவாக்கம் அடை யாமையும் இதற்கான காரணங்களாகும்

**(2 புள்ளிகள்)**

- நிலைபேறுடைய வளர்ச்சியை அடைய முடியாமல் போனமைக்கான பல காரணங்கள் உள்ளன. இனப் பிரச்சினையும் உள்நாட்டுப்போரும்இ பொருளாதாரக் கரிசனைகளைவிட அரசியல் மற்றும் கலாசாரக் கரிசனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமை, அரசாங்கங்கள் அடிக்கடி மாற்றப்பட்டமை, அதன்காரணமாகப் பொருளாதாரக் கொள்கைகள் அடிக்கடி மாற்றப்பட்டமை, அரசியலுக்கும் சமயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமை போன்றன இதற்கான காரணங்களாகும்.

- காலத்திற்கு உகந்த நடைமுறைசார்ந்த கொள்கைகளுக்கு மாறாக கருத்தியல் சார்ந்த கொள்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கியமைஇ தாராளமயமாக்கப் படுத்தப்பட்ட உலகப்பொருளாதாரத்தில் போதிய ஏற்றுமதி வாய்ப்புகளைக் கைப்பற்ற இயலாமற்போனமை, தொழினுட்ப திறன் அபிவிருத்திகளைப் புறக்கணித்தமை மற்றும் அவற்றை விருத்தி செய்யாமை போன்றன இலங்கைப் பொருளாதாரத்தின் குறைவான செயலாற்றத்திற்கான சில காரணங்களாகும்

- பாதகமான வர்த்தக மாற்றுவீதம் பெற்றோலிய விலை அதிகரிப்பு பாதகமான உலக நிதித்துறை அபிவிருத்திகள் போன்ற வெளியக அதிர்ச்சிகள் மற்றும் சாதகமற்ற புவிசார் அரசியல் நிலைமைகள் போன்றனவும் கடந்த 71 வருடங்களாக இலங்கைப்பொருளாதாரத்தை மோசமாகப்பாதித்துள்ளன.

- இத்தகைய உள்ளக மற்றும் வெளியக அதிர்ச்சிகள் குறைவான பொருளாதார செயலாற்றத்திற்குப் பெரும்பாலும் காரணமாக அமைந்தாலும் நடைமுறைப் பொருத்தமற்ற உள்நோக்கிய பொருளாதாரக் கொள்கைகளும், பொருளாதாரக் கொள்கைகளின் தொடர்ச்சியற்ற நிலையும், பலவீனமான பொருளா-தார முகாமைத்துவமும், பொருளாதார வளர்ச்சியை மந்தகதியாக்கியதில் பங்களித்தன.

அடிப்படையில் வேறுபட்ட பொருளாதாரக் கொள்கை முறைமைகள் மாறிமாறி அமுல்படுத்தப்பட்ட போது அவை பொருளாதாரத்தில் கணிசமானளவு நிச்சயமற்ற தன்மையினை ஏற்படுத்தின. பொருளாதாரக்கொள்கைகளைப் பின்னோக்கி நகர்த்துவது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டுக்கான புறச்சூழலை சாதகமற்ற மோசமான நிலைக்கு இட்டுச் செல்லும்.

- ஏற்றுமதிகளின் மந்தகதியிலான அதிகரிப்பு கடந்த காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார செயலாற்றத்திற்குத் தடையாக இருந்துள்ளது. ஏற்றுமதி வளர்ச்சியை விடக் கூடுதலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது (உள்நோக்கிய) உள்நாட்டுப் நாட்டுப்பொருளாதாரக்கொள்கைகள் மீது கவனம் செலுத்துவதன்மூலம் பெறப்பட்டுள்ளமையைத் தெளிவுபடுத்துகிறது.

- உள்நாட்டுப்பொருளாதாரக்கொள்கைகள் பாதகமான வெளிநாட்டு அதிர்ச்சிகளின் போது குறைந்த சேதத்துடன் பொருளாதாரம் நகர்ந்து செல்வதற்கு வழிவகுக்கும். ஆனால் இக்கொள்கைகள் பொருளாதாரத்தை வளர்த்தெடுக்க உதவாது. உள்நாட்டுச் சந்தையின் பருமன் வரையறுக்கப்பட்ட நிலையில் உள்ளமையே இதற்கான காரணமாகும்.

**(தலா 01 புள்ளி வீதம் எதேனும் மூன்று உதாரணங்களுக்கு மொத்தம் 05 புள்ளிகள்)**

(iv) - காலத்திற்கு உகந்த பொருளாதாரக் கொள்கைகள் என்பவை குறிப்பிட சந்தர்ப்பத்திலுள்ள பொருளாதார நிலைமைக்குப் பொருத்தமாக இயங்கக்கூடிய பொருளாதாரக் கொள்கைகளாகும். அவை வளர்ச்சியை ஏற்படுத்துவதில் வினைத்திறனுடன் செயற்படுவனவாகும். கிழக்காசிய நாடுகளின் துரித பொருளாதார வளர்ச்சி சந்தேகத்திற்கிடமின்றி அவற்றின் காலத்திற்கு உகந்த பொருளாதாரக் கொள்கைகளால் ஏற்பட்டதாகும். திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கையாண்டால் துரித பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தலாமென அவைந ம்பின. வெளிநாட்டு நேரடிமுதலீடுகளை வரவழைத்து கைத்தொழில்களை உருவாக்கின. இதன்பொருட்டு ஏற்றுமதியை நோக்கிய பொருளாதார வளர்ச்சிக் கொள்கையைக் கடைப்பிடித்தன.

- இலங்கையின் கருத்துருவ வாதக் கொள்கைகளின் செல்வாக்கினால் வினைத்திறனான பொருளாதாரக் கொள்கைகளை கடைப்பிடிக்க முடியாமல் போனது. மாறாக முன்னாள் கம்யூனிச நாடுகள் தமது பொருளாதாரக் கொள்கைளையும் வர்த்தகக் கொள்கைகளையும் தாராளமயப்படுத்தின.

**(02 புள்ளிகள்)**

- இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் அவற்றின் வினைத்திறனை அடிப்படையாக வைத்துத் தீர்மானிக்கப்படவில்லை. மாறாக பதவிக்கு வரும் அரசாங்கங்கள் பின்வற்றும் கருத்தியலின் அடிப்படையிலேயேதீர்மானிக்கப்பட்டன. இதற்குநல்லஒருஉதாரணம்இலங்கைபெருந்தோட்டங்களைத் தேசியமயமாக்கிய சம்பவமாகும். இது தங்கமுட்டையிடும் வாத்தின் கழுத்தை அறுத்துக் கொன்றதற்குச் சமமாகியது. இலாபகரமாக இயங்கிய பெருந்தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டதன் பின்னர் அரசாங்கத்தின் நிதிப் பொறுப்புகளாக மாறின. அவற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. ஏனைய அரசுடைமை நிறுவனங்களைப் போன்றே அவையும் நட்டத்தில் இயங்கின. அரசாங்க வருவாயினால் அவை நிதிப்படுத்தப்பட்டன.

- 300 க்கும் அதிகமான அரசுடைமை நிறுவனங்கள் தொடர்ந்து நட்டத்தில் கருத்தியல்வாத காரணிகள் தனியார்மயமாக்கலுக்கு எதிராகச் செயற்படுவதற்கான தெளிவான உதாரணமாகும். வருடாந்தம் இவை அரசாங்க வருவாயின் கணிசமான பகுதியைக் கபளீகரம் செய்கின்றன. இவற்றை புனரமைப்பதுபற்றி காலாகாலமாக பேசப்பட்டு வருகிறது ஆனால் செயலில் காட்டப்பட்டது அற்பமே.

- அரசாங்கம் அரசுதுறை நிறுவனங்களை தனியார்மயப்படுத்த முடியாமைக்குப் பல காரணங்கள் பின்னணியில் உள்ளன. தனியார் மயமாக்கல் என்பது தமது குடும்பச் சொத்தை விற்பதைப் போன்றது என்னும் பொது அபிப்பிராயம் உருவாக்கப்பட்டுள்ளது. தனியார் மயமாக்கம் என்பது அரசாங்கத்தின் செல்வத்தை விற்பது என்னும் கருத்துருவம் பொதுமக்கள் மத்தியில் ஆழமாக விதைக்கப்பட்டுள்ளது.

- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசதுறைமீது ஏற்பட்ட நிதி அழுத்தங்களைக் குறைப்பதற்காக சில நிறுவனங்களை தனியார் மயப்படுத்தினார். தொலைத்தொடர்புஇ சிறிலங்கன் விமானசேவை மற்றும் எரிவாயுக்கம்பனி போன்றன இதில் உள்ளடங்கும். சிறிலங்கன் விமானசேவை மீண்டும் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு தொடர்ச்சியாக பாரிய இழப்புகளைச் சந்தித்து வருகிறது.

- அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் அரசியல்வாதிகளுக்கு பணம் உழைப்பதற்காகவும் பொதுமக்கள் ஆதரவைப்பெறும் பொருட்டு வேலை வாய்ப்புகளை வழங்கவும் ஊழல் புரியவும் வாய்ப்பு வழங்குகின்றன.

- மேலே சொல்லப்பட்டவை தவிர வேறுசில பொருளாதாரக் கொள்கைகளும் அரசியல் நோக்கங்களுக்காகவும், செல்வாக்குகளுக்காகவும் உருவாக்கப்பட்டன. வர்த்தகக் கொள்கைகள் அதற்கு ஓர் உதாரணமாகும் 1977 இல் வர்த்தகத் தாராளமயப்படுத்தப்பட்டாலும் காலப்போக்கில் அது கைவிடப்பட்டது.

- 1977இல் ஆசியாவில் முன்னோடியாக வர்த்தகத்தாராளமயமாக்கத்தைப் ஏற்படுத்திய இலங்கை தற்போது ஆசியாவிலேயே மிகவும் வர்த்தகப்பாதுகாப்பு மிக்க நாடாக மாறியுள்ளது. காலத்திற்கு காலம் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட கட்டணங்கள் காரணமாகவும் துணைத்தீர்வைத்தடைகள் காரணமா-கவும் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

**(தலா 01 புள்ளி வீதம் ஏதேனும் மூன்று உதாரணங்களுக்கு மொத்தம் 05 புள்ளிகள்)**